# மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

## தற்கொலையா ?




T. S. பாண்டியன்
078.

பலமற்ற காங்கிரஸ் மேயர் தேர்தலில் போட்டியிட்டது தற்கொலைக்கு ஒப்பானது அல்லவா !

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 13—12—59 | ஒலி 7

# உண்டி வைப்போம்

# ஊராள்வோரை விரட்டுவோம்!

நீண்ட நெடுங்காலமாக ஆட்சி பீடத்தில் அமர்ந்து நம்மை வாட்டிவதைத்து வரும் கொடுங்கோல் கொற்றத்தை விரட்டியடிக்க, நம்மையெல்லாம் நமது மாபெரும் தலைவர் அறிஞர் அண்ணா அழைத்திருக்கிறார்!

அடுத்து வரும் பொதுத் தேர்தலுக்கு இப்போதே ஆக்க பணியில் ஈடுபட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்! ஆம் கட்டளை தான் யிட்டிருக்கிறார்! அவருக்கு கட்டளையிடும் பழக்கமில்லா விட்டாலும் நாம், அதை கட்டளையாக ஏற்றால் தான் நமக்கோர் தனி உற்சாகம் பிறக்கும், தனி உறுதிப்பாடும் உண்டாகும்!

ஒரு தலைவன் அன்பாகச் சொன்னாலும், கனிவாகச் சொன்னாலும் தொண்டர்கள் அதை கட்டளை என்று கருதி ஏற்றால்தான் அந்தத் தலைவன் எண்ணிய எண்ணம், கொண்ட கொள்கை நிறைவேறும்! எனவே நம் தலைவர் அண்ணா விடுத்த வேண்டுகோளை கட்டளையாகக் கருதி "உடனே செயலாற்றப் புறப்படுங்கள்! உடனே புறப்படுங்கள்" என்று உங்களை வேண்டுகிறோம்!

சென்னையில் நடைபெற்ற மேயர் பாராட்டு விழா கூட்டத்தில் நமது அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டவர்கள், ஏடுகளிலே படித்தவர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்-உடனடியாக அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றித் தாருங்கள்!

"உங்கள் அறிவின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்-ஒரு ஐந்து இலட்சத்தைத் தாருங்கள், நிச்சயமாக காமராஜரை ஒரு கைபார்க்கிறேன்!" என்று நமது அண்ணா அவர்கள் சொன்னதை நாம் கேட்டோம்!

"அண்ணா! ஐந்து இலட்சமென்ன-இதோ பத்து இலட்சம்-எங்களை பக்தவத்சலம் என்று எண்ணி விடாதீர்கள், நாங்கள் பரம ஏழைகள் என்றாலும் பத்து இலட்சம் தருகிறோம், ஒருகை பாருங்கள்" என்று நாம் அவருக்குச் சொல்வோமானால்—நிச்சயமாக அடுத்த மந்திரி சபையில் அமர்வது அவர்களல்ல—நாம் தான்!

"உண்டி வைத்தோம்—உழைத்து வந்த ஊதியத்தில் ஒரு பகுதியைச் சேர்த்தோம்! இதோ ஒரு ஆயிரம்!

"பெட்டிக் கடை வைத்தோம், வயிற்றைக் கட்டினோம், வாயைக் கட்டினோம்! இதோ ஒரு இரண்டாயிரம்!"

"காலைமுதல், மாலைவரை கணக்கெழுதும் வேலைதான் என்றாலும் கணக்காகச் சேர்த்தத் தொகை ஐந்தாயிரம்! பெற்றுக் கொள்ளுங்கள்!"

"பலருக்கு க்ஷவரம் செய்தோம், சிலருக்கு மொட்டையும் அடித்தோம்! இந்தத் தொகையால் இந்த ஆட்சிக்கு க்ஷவரம் செய்யுங்கள்"!

இப்படி பல்வேறு துறையிலும் ஈடுபட்டிருக்கும் நமது நண்பர்கள், இயக்கத் தோழர்கள் அனைவரும் அண்ணாவின் மனதைக் குளிரவைத்தால் இந்த ஆட்சிக்கு குலை நடுக்கம் ஏற்பட்டு தேர்தல் என்ற நப்பாசையையே விட்டு விடும் என்பதை உங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லமுடியும்! "கூட்டம் அவர்களுக்கு ஓட்டு நமக்கு" என்று கர்வம் பிடித்துப் பேசுபவர்களின் கொட்டமும் அடங்கும்!

என்னதான் நாம் வலிவோடும், பொலிவோடும் இருந்தாலும், என்னதான் நமக்கு மக்கள் சக்தி இருந்தாலும் என்னதான் நமக்குத் தொண்டர்களும், தியாகிகளும் இருந்தாலும்—நாம் எதிர்த்துப் போராடுகின்ற எதிரியை கொஞ்சம் நினைத்துப் பார்த்தால், அவர்களுடைய வஞ்சகமும், சூழ்ச்சியையும் கொஞ்சம் மனத்திலே எண்ணிப் பார்த்தால் பணத்திற்கு இருக்கின்ற செல்வாக்கையும், அதற்கு இருக்கின்ற மதிப்பையும் புரிந்து கொள்ள முடியும்!

ஒரு கட்சி பணத்தால் மட்டும் வளரமுடியாது! ஒரு கட்சி செல்வத்தால் மட்டும் தழைக்க முடியாது! ஒரு கட்சி வாழ தியாகம் வேண்டும், தியாகம் புரிந்திட சுயநலமற்ற தொண்டர்கள் வேண்டும்! எல்லாவற்றையும்விட மக்களுடைய அன்பையும், ஆதரவையும் பெறவேண்டும்! அப்போதுதான் அந்த கட்சி வாழவும் முடியும், நல்ல பணிகளை செய்திடவும் முடியும்!

பணத்தால் மக்களுடைய ஆதரவை பெற முடியாது என்று சொல்லவில்லை! பெறமுடியும்! எத்தனையோ இடங்களில் பெற்றும் இருக்கிறார்கள்!

அவர்கள் பணத்தால் பெறுகின்ற ஆதரவுக்கும், நாம் பெறுகின்ற அன்புக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு!

அவர்கள் பெறுகின்ற ஆதரவு விலைமாது கொடுக்கின்ற சுகத்திற்கொப்பாகும்!

நாம்பெறுகின்ற அன்பு உள்ளத்தை கவர்ந்த மனையாட்டி தருகின்ற சுகத்திற்கு ஒப்பாகும்!

அந்த அன்பும் மேனியிலே பளபளப்பும், டாடாவின் பணமும், டால்மியாவின் செல்வமும் இருக்கின்ற வரையில் தான் கிடைக்கும்!

நாமோ; நம் உயிருள்ள வரையில் அந்த அன்பை பெறமுடியும்!

நாம் பணம் கேட்பது, விலை மாதரிடம் தந்து கள்ள இன்பம் பெற அல்ல! சொந்த மனைவிக்கு சேலை வாங்கித் தர, அவளுக்கு சோறு போட!

"தேர்தலில் வெற்றிபெற ஐந்து இலட்சம் ஏன்?" என்ற வினாவைத் தொடுத்திடுபவர்களுக்கு இந்த விளக்கம் போதும் என்றே நம்புகிறோம்!

நம்முடைய நண்பர்கள் உடனடியாக செயலில் இறங்க வேண்டும்!

"அடுத்துவர இருக்கின்ற பொதுத் தேர்தலுக்காக இப்போதே பணியைத் துவக்க வேண்டும்" என்று 'மாலைமணி' ஏடு அடிக்கடி உங்களைத் தூண்டிக்கொண்டே வந்திருக்கிறது! "பணம் சேருங்கள், பதவிப் பித்தர்களை விரட்டியடியுங்கள்" என்பதை வலியுறுத்தி, வலியுறுத்தி சொல்லி இருக்கிறோம்! அண்ணாவும் நமக்கு கட்டளைப் பிறப்பித்து விட்டார்! உடனே செயலாற்றுங்கள்!

சென்ற ஆறாம் தேதி சென்னையிலே அண்ணா பேசினார்! சரியாக இன்றோடு ஒரு வாரமாகிவிட்டது! எத்தனை பேர் உண்டி வைத்தீர்கள்? எவ்வளவு தொகை சேர்த்தீர்கள்! கணக்கிட்டுப் பாருங்கள்!

அன்று அண்ணா பேசியது அலங்காரத்திற்காக அல்ல, அடுக்கு மொழிக்காகவும் அல்ல—அக்கிரமத்தை விரட்ட, நல்லாட்சியை மலரச் செய்ய!

நாம் என்றுமே கடமையை மறந்ததில்லை! இதிலும் மறக்க மாட்டோம் என்பதை செயலால் காட்டி இந்த ஆட்சியை நடுங்க வையுங்கள்!

தேர்தல் இன்னும் நீண்டில்லை! 1962-ல்தான் வருகிறது! இடையிலே இருப்பது இன்னும் இரண்டே இரண்டு ஆண்டுகள் தான்!

இன்றே உண்டி வையுங்கள்! ஐம்பது காசு சம்பாதித்தால் அதிலே ஒரு காசு போடுங்கள்! ஒரு ரூபாய் என்றால் இரண்டு காசு போடுங்கள்! நாலு, ஐந்து என்றால் அதற்கேற்ப சேகரியுங்கள்!

அண்ணா சொன்னது நினைவிருக்கட்டும்! காசு இருந்தால் காசு தாருங்கள்! உடலிலே வலிவு இருந்தால் உழைப்பைத் தாருங்கள்! பேச்சுத் திறமை இருந்தால் கழகத்திற்காகப் பேசுங்கள்! ஏடுகள் நடத்தினால் எழுதுங்கள்!

உங்களால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யுங்கள்!

நண்பர்களே! இயக்க வீரர்களே! உண்டி வையுங்கள்! ஊராள்வோரை விரட்டுங்கள்! நம் அடிமைத் தளையை நீக்குங்கள்!

நாங்கள் உண்டி வைத்து விட்டோம்! "மாலை மணி" ஏடு—நாட்டிலே நல்லாட்சி மலர நாற்பது காசு சேர்த்து விட்டது! நீங்கள் எத்தனை காசு சேர்த்திருக்கிறீர்கள்! நீங்கள் அளிக்கப் போகின்ற விடையால் தான் காமராஜர் ஆட்சியின் ஆயுளை கணிக்க முடியும்!

**நல்ல விடையளிப்பீர் !**

**நாட்டு மக்களுக்கு நல் வாழ்வு தாரீர்!**

# ஐந்து லட்சம் தாருங்கள் காமராசரை முறியடித்துக் காட்டுகிறேன் !

## உண்டி வையுங்கள்-தேர்தலுக்கு பணம் சேர்த்துத் தாருங்கள்!


## அவர்கள் வெற்றி பெற்ற முறை எது ?

## அதையே கையாண்டோம் - நாம் வென்றோம்!

## அவர்கள் வீழ்ந்தார்கள் !

## இந்த முறை நீடிப்பது அநாகரீகம்-அநாகரீகம்!

### சென்னையில் அறிஞர் அண்ணா முழக்கம் !




அன்புமிக்க தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே!

நம்முடைய கழகத் தோழர்களில் இருவர் மாநகராட்சி மன்றத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் வெற்றி பெற்று வந்துள்ளதைக் கண்டு, நாம் அதிகமாக மகிழ்ந்து இந்த பாராட்டுக் கூட்டத்தைக் கூட்டி இருக்கிறோம்! இதற்குப் பாராட்டுக் கூட்டம் என்று பெயர் வைப்பதை விட—சம்பந்தப்பட்டவர் ஒருவரோடு ஒருவர் பேசி மகிழ்ந்திடுவதைப் போல் நாம் இங்கே கூடி, நம்முடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்!

''இது ஒரு பெரிய வெற்றியா? இதற்கு ஒரு கொண்டாட்டமா'' என்று கேட்கக் கூடும்—இந்த வெற்றியை கொண்டாட முடியாதவர்கள் கேட்கலாம்!

கல்யாணம் நடந்து கொண்டிருக்கும் வீட்டிற்கு போகிறவர்களைப்பார்த்து''இம்...கல்யாணத்தில் என்ன இருக்கிறது'' என்று சிலர் சொல்லுவார்கள் !

'கல்யாணத்தில் என்ன இருக்கிறது'' என்பது கல்யாணமானவர்களுக்குத் தான் தெரியும்! கல்யாணமாகாதவர்களுக்கு கல்யாணத்தைப் பற்றி என்ன தெரியும் ! கல்யாணமாகாதவர்கள் எல்லோருக்குமே ஒன்றும் தெரியாது என்று சொல்லவில்லை—சிலருக்கு அதைப் பற்றி தெரிந்தும் இருக்கலாம்!

நாம் தோற்றிருந்தால் இந்நேரம்மாற்றார்கள் என்ன பேசிக் கொண்டிருப்பார்கள், எப்படி எப்படி யெல்லாம் நம்மைப் பார்த்து பேசுவார்கள் என்பதை உணர்ந்தால் இந்த வெற்றியின் முக்கியத்துவம் தெரியும்!

ஆரம்ப காலத்தில் இந்த இடம் தேவை என்று முயற்சி எடுத்துக் கொள்ளவே இல்லை! திருவல்லிக்கேணியில் நடைபெற்ற முதல் கூட்டத்திலும், திருவாரூரில் நடைபெற்ற கூட்டத்திலும் இதைப் பற்றி நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன்!

இதைக் கேட்டு காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் ஆதரவு பெற்ற ஏடுகளும் ''பெரும்பான்மையாகவுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலிருந்து நழுவப் பார்க்கிறது, நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள தயங்குகிறது'' என்று வலியுறுத்தி வலியுறுத்தி கூறிய பின்பு தான் மக்களுடைய முடிவை அறிய விரும்பினேன்! பொது மக்கள் கட்டளை இடுவார்களானால் பதவி ஏற்பதாகச் சொன்னேன்! அதற்குப் பின்பு தான் மேயராக அரசுவும், துணை மேயராக சிவசங்கரனும் நமக்குக் கிடைத்தார்கள்!

இன்றையத் தினம் இங்கே களிப்போடு வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! இந்த வெற்றிக்கு நாம் பட்டபாடு! எத்தகையது என்பதை பலர் அறிய மாட்டார்கள்! இங்கே எல்லோருமே கணக்குப் போட்டார்கள்! நாற்பத்தி ஐந்தும் ஒண்ணும் நாற்பத்தி ஆறு—ஒரு நாலு, ஒரு இரண்டு ஆக மொத்தம் ஐம்பத்தி இரண்டு என்று கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்! நாற்பத்தி ஐந்து எப்போதும் நாற்பத்தி ஐந்தாக இருக்க வேண்டும்! இன்னும் சிலர் கணக்குப் போட்டார்கள் ஒரு நாற்பத்தி ஆறு, ஒரு நாலு ஆக மொத்தம் ஐம்பது என்று! கணக்குப் போட்டவர்களுக்குத் தெரியும், கணக்கும் போடுவதிலே எத்தனை சிரமம் இருந்தது என்பது!

இதைப் போல் அவர்களும் கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்—முப்பத்தி எழு, ஒரு பதினொன்று ஆக நாற்பத்தி எட்டு, வெற்றி எங்களுக்குதான் என்று போட்டுப் பார்த்தார்கள்!

நான் பெத்துநாயக்கன் பேட்டைத் தொகுதியில் கார்ப்பரேஷன் கௌன்சிலருக்காக நின்று தோற்றிருக்கிறேன்! அப்போது இங்கே இருக்கின்ற நண்பர் ஆறுமுகம் எனக்காக அரும்பாடுபட்டார்! இப்போது நாம் இரண்டாவது மேயரைப் பெற்றிருக்கிறோம்!

ஒரு காலத்தில் கார்ப்பரேஷன் கட்டிடத்திற்குள்ளேயே நுழைய முடியாத நிலை இருந்தது! இன்று நாம் மேயர் பதவியை பெற்றிருக்கிறோம்! இதைப் பற்றி நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் தெரியும்-நாம் வளர்ந்திருக்கிற வளர்ச்சியும், நாம் பெற்றிருக்கிற பொலிவும், அதனால் நமக்கு ஏற்பட்டிருக்கிற மகிழ்ச்சியும், நமக்குக் கிடைத்திருக்கிற பொறுப்பும் எத்தகையது என்பது! நமக்கு கிடைத்திருக்கிற பொறுப்பை உணர்ந்து பொறுப்புடன் நாம் நடந்து கொள்ள வேண்டும்!

நகர சபையில் இருக்கும் நமக்கு, சரியான முறையில் அதி

4-ம் பக்கம் பார்க்க

# நமது மேயர் அப்துல்காதர் புடம் போட்டத் தங்கக் கட்டி !

(3-ம் பக்கம் பார்க்க)

(அண்ணா பேச்சு)

காரம் தரப்படவில்லை! நாம் மாநில சர்க்காரின் தயவை நாடி தான் ஆக வேண்டும்! கொடுமைக்கார மாமியாருக்கு கிடைத்திருக்கிற மருமகளைப் போல் நாம் இருக்கிறோம்! கொடுமைக்கார மாமியாரை சிரிக்க வைத்து நாம் காரியங்களை சாதித்துக் கொள்ள வேண்டும்! கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை என்றாலும் மருமகளுக்கு ஒன்றுமில்லை! ஊர் சிரிக்கும்!

நம்முடைய 45 தோழர்களும் எஃகு உள்ளம் படைத்தவர்கள் என்பதை நான் அறிவேன்! வாலிப வயது! ஆசாபாசங்களுக்கு கட்டுப்படும் பருவம்! சிரித்தால் அந்த சிரிப்பிலே மயங்கி விட்டால் என்ன செய்வது என்று சற்று பயந்தேன்!

பத்து வருடங்களுக்கு முன்பு, "பிள்ளை பிடிக்க வருகிறார்களாம்" என்று பெற்ற தாய் கேள்விப்பட்டவுடன் பயந்து கொண்டு பிள்ளையை பதுக்கி வைக்க ஆரம்பித்தார்களாம்! அதே போல் நாமும் பிள்ளைகளை பிடித்து வைக்க வேண்டியிருந்தது! பிள்ளைகளின் மடியில் இருப்பதை எடுத்துக் கொள்ள நினைத்தார்கள்! நம்முடைய பிள்ளைகளோ. அவர்களுடைய மடியிலிருந்தே எடுத்து வைத்திருக்கிறார்கள்!

கழகத் தோழர்களைப் பற்றி அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை! கழகத் தோழர்களிடம் படிந்து கிடக்கும் கொள்கைகளைப் பற்றி அவர்கள் அறிய மாட்டார்கள்! நம் தோழர்களை சாதாரணமானவர்கள் என்று எண்ணி வந்தார்கள்! அன்பழகன் குறிப்பிட்டது போல் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்!

சிரித்துப் பேசி, "சிட்டாடலரா" என்று கேட்டு, ஹோட்டலுக்கு போகலாம் "என்று அழைத்து — தட்டி தோளைப் பிடித்தும் பார்த்தார்கள்! தேர்தலில் ஆசையைக் காட்டி நம் தோழர்களை இழுக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள்! மேயர் பதவி கிடைத்ததை விட அது எனக்கு பெருமகிழ்ச்சியும், பூரிப்பும் ஏற்பட்டது!

சில மாதங்களுக்கு முன்பே அப்துல் காதரைப் பார்த்து "நீங்கள் மேயராக வர இருக்கிறீர்கள்" என்று கூறினேன்! அதிலிருந்து என் வீட்டிற்கு அப்துல் காதர் வருவதே இல்லை! "என்ன இந்த அப்துல் காதருக்கு இவ்வளவு கூச்சம்" என்றும் நினைத்துக் கொண்டேன்! வயது தான் இருபத்தெட்டே தவிர அவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு! முக்கியமான காரியங்களில் அவர் கூச்சப்பட்டதாகத் தெரியவில்லை! அப்துல் காதருக்கு நிச்சயமாக கூச்சம் இருக்க முடியாது! கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணி புரிந்து வருபவர்! தியாகம் செய்வதற்கு அஞ்சாதவர்! சிறைச்சாலைக்கு சென்று கொடுமைகளை அனுபவித்தவர்! தியாகத் தீயில் புடம் போட்டு எடுத்தத் தங்கக்கட்டி!

துணை மேயர் தேவராஜன் அவர்களும் கொள்கைக்காகப் பாடுபடுபவர்! முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய பணியினை புரிந்து வருபவர்! நம்முடைய மேயர் அப்துல்காதர் உண்மையாக உழைப்பவர், மக்களின் நல்வாழ்வு கருதி பாடுபடுபவர்! அதிலே ஒரு துளியும் குறைந்தவரல்ல நமது துணை மேயர்!

நம்முடைய கழகம் பொறுப்பிலிருக்கிறது! மாற்றார்கள் நம்மைப் பற்றி கவனித்துக் கொண்டே இருப்பார்கள்! நம்முடைய பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்! ஜூலியஸ் சீசர் ரோம் நாட்டுக்கு தலைவரான போது, அவரும், அவரது மனைவியாரும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னதாக ஆங்கிலத்தில் 'ஒரு பழமொழி உண்டு!

நமது கழகத் தோழர்கள் பொறுப்பு உணர்ச்சியோடு நடந்து கொண்டு கழகத்திற்கு பெருமையைத் தேடித் தர வேண்டும்!

அரசு மேயரான பிறகு சென்னையிலுள்ள ஒரு பிரமுகர் டெலிபோன் மூலம் கேட்டு என்னிடம் வந்து பேசினார்! "உங்கள் மேயர் அரசுவை பார்த்தேன்! உங்கள் கழகத் தோழர்கள் இப்படிப்பட்டவர்களா என்பதை அப்போது தான் தெரிந்து கொண்டேன்! ஆற்றல் படைத்தவர், திறமைசாலி, நல்ல அறிவாளி "என்று புகழ்ந்தனர்" உங்கள் கழகத் தோழர்கள் எல்லோருமே இப்படித் தான் இருப்பார்களா" என்றும் கேட்டார்! இதையும் மிஞ்சக் கூடியவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் என்று பதில் சொன்னேன்! அப்படியானால் உங்கள் கழகத்தில் சேர்ந்து விடலாமே என்று கூறினார்!

நிர்வாகத்தில் உள்ளவர்களை எல்லோருமே கூர்ந்து கவனிக்க ஆரம்பிப்பார்கள்! என்னையோ அன்பழகனையோ! அவ்வளவு தூரம் கவனிக்க மாட்டார்கள்! ஏன் என்றால் நாங்கள் நிர்வாகத்தில் இல்லை! நீங்கள் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறீர்கள்! இதை மனதில் எண்ணி நீங்கள் பணியாற்ற வேண்டும்!

நம்முடைய தோழர்கள் பணியாற்ற வேண்டும் என்று சொல்லுவதை விட—நீங்களும், நானும் அவர்களுக்கு உறு துணையாக நின்று செயல் புரிய உதவி செய்ய வேண்டும்!

நகர மன்றத்திலிருக்கும் 45 தோழர்களுக்கும் நாம் பக்க பலமாக இருந்தால் அவர்கள் தைரியத்தோடும், துணிவோடும் செயலாற்ற முடியும்!

கூட்டத்திற்கு வந்து குதூகலம் அடைவதோடு நிற்கக் கூடாது! உங்கள் வட்டத்திற்கு என்ன வேண்டும் என்பதையும், என்ன குறைபாடுகள் உள்ளன என்பதையும் எடுத்துக் காட்டி அவர்கள் பணிபுரிய உதவி செய்ய வேண்டும்! "ஆறு பேருக்கு வாத்தியார் வேலைவேண்டும்,ஏழு பேருக்கு அந்தவேலைவேண்டும்" என்று கேட்கச் சொல்லுவதாக நினைக்கக் கூடாது! நான் சொல்லாமலேயே அதை கேட்பீர்கள்! அப்படிக்கேட்டால் அது கிடைக்கவும் கிடைக்காது! அப்படிப்பட்ட பொறுப்புகளோடு நடந்து கொள்ள வேண்டும் என்பது தான் இப்படிப்பட்ட பாராட்டுகளின் முக்கிய நோக்கமாகும்!

மற்றும் ஒன்றை நீங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்! சென்ற மாதம் 23-ம் தேதி பொள்ளாச்சியிலிருந்து 24-ம் தேதி சென்னை வந்து சேர்ந்தேன்.! தஞ்சை மாவட்டத்திலும், நான் சுற்றுப் பயணம் சென்ற ஊர்களிலும் என்னைப் பார்த்தவுடன் கழகத் தோழர்கள் கேட்ட முதல் கேள்வி— "இந்தத் தடவையும் மேயர் நாம் தானே" என்பது தான்! "நாம் தான் மேயர் என்பதிலே" அவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி! அவர்கள் கண்களிலே ஒளியைக் காண்கிறேன், குரலிலே தாபத்தைக் காண்கிறேன்! "இந்தத் தடவையும் நாம் தானே மேயர், நாம் தானே" என்று கேட்கக் காரணம் என்ன? அவர்களுக்கே சந்தேகம்!" போன தடவை காங்கிரஸ்எப்படியோ ஏமார்ந்து போய் விட்டது! நமக்காவது மேயர் பதவி கிடைக்கப் போவதாவது" என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார்கள்!

காங்கிரஸ்காரர்களும் நினைத்துக் கொண்டிருந்தார்கள்! "அற்பனுக்கு வாழ்வு வந்தது—இந்தத் தடவை பார்க்கலாம், பார்க்கலாம்" என்று மீசை உள்ளவர்களும், மீசை இல்லாதவர்களும் தடவிப் பார்த்து—"துடிக்கிறது, துடிக்கிறது" என்று மகிழ்ந்தார்கள்!

"மேயர் தேர்தலில் என்ன நடந்தது" என்பதை நான் அப்படியே சொல்லா விட்டாலும் கொஞ்சம் ஜாடைமாடையாகச் சொல்ல விரும்புகிறேன்!

இதுவரை தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் சில முறைகளைக் கையாண்டு வந்தார்கள்! 'என்ன முறை அது, நல்ல முறையா, கெட்ட முறையா" என்றெல்லாம் கேட்காதீர்கள்! அவர்கள் ஒரு முறையை கையாண்டு வந்தார்கள், நாமும் அந்த முறையைக் கையாண்டுப் பார்த்தோம், வெற்றியும் பெற்றோம்! இதை இங்கே கூறுவது பெருமைப்பட அல்ல— மறுபடியும் அதைச் செய்யாத நிலையை உண்டாக்கத் தான்!

சட்ட சபையில் இதையே நானும் சொன்னேன்! இந்த மாநிலத்தின் முதலமைச்சர் கனம் காமராஜர் நம்மையெல்லாம் பிச்சைக்காரர்களுக்கு ஒப்பிட்டு பேசியதற்கு பதில் தரும் வகையிலே அவரிடம் கூறினேன்! முதலமைச்சர் கனம் காமராஜரைப் பார்த்து! "பிரபுவே! நீங்கள் எப்படி இந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை அறிவேன்! தேர்தலில் நீங்கள் கையாண்டு வரும் முறைகளையும் நான் அறிவேன்! அந்த முறைகளை நாங்களும் கற்றுக்கொண்டு வருகிறோம்" என்று கூறினேன்! அவர்கள் முறை நம்மை வெற்றி பெற வைத்தது! அவர்களைத் தோற்க வைத்தது!

அந்த முறையை இது வரையில் நாம் கையாளாமல் இருந்தது—அந்த முறை தெரியாது என்று அர்த்தமல்ல— தேவையில்லை என்று கருதினோம், கூடாது என்று நினைத்தோம்! இன்னமும் சொல்லுவேன் அந்த முறை நாகரீகமானது அல்ல, நாட்டிற்கு நன்மை பயக்கும் முறையுமல்ல!

காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஜனுப் சுல்தான் மொய்தினைப் பார்த்தவர்களுக்குத் தெரியும்! சுல்தான் மொய்தீன் நினைத்தால் நமது மேயர் அப்துல்காதரைத் தூக்கி, இரண்டாக மடித்து தன்னுடைய ஜோபியில் போட்டுக் கொள்ள முடியும்! ஆனால் அப்துல்காதரின் உருவத்தை தான் அறிந்திருப்பார்கள்- உள்ளத்தை அறிந்திருக்க மாட்டார்கள்!

இன்னும் கேட்டால் சுல்தான் மொய்தினுக்கும் எனக்கும் அதிக தொடர்புண்டு! அவர் ஒரு பொடி வியாபாரி! அவர்களெல்லாம் நம்மைப் பற்றி முதலில் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை! முடிவில் தான் தெரிந்து கொண்டார்கள்! "என்ன பாடு பட்டாலும் இப்படி, அப்படி அசைக்க முடியவில்லையே" என்று ஆயாசமும் அடைந்தார்கள்!

செங்கல்லை சும்மா அடுக்கி வைத்தால் அது நிற்காது—சுல

(9-ம் பக்கம் பார்க்க)

# 'திராவிட நாடு கிடைக்குமா என்று கேட்டவர்கள் - கிடைக்கும்-வாழுமா என்கிறார்கள்! ஆளத் தெரியுமா என்கிறார்கள்!'

## ' ஆளத்தெரியும்-ஆனால் நீங்களே ஆளுங்கள்!'

## நையாண்டி புரியாதீர்! நாட்டிற்கு நல்வாழ்வு அளிக்க முன் வாருங்கள்!

### சென்னையில் அறிஞர் அண்ணா பேருரை !

புரசை, முத்தமிழ் மன்றத்தின் சார்பில் கடந்த 8—12—59 அன்று கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தோழர் இரா. நாராயணன் தலைமை வகித்தார்.

பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் பேசியதாவது—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே!

இந்த வட்டாரத்திலே உள்ள நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு துணையாக முத்தமிழ் மன்றத்தின் மூலம் பணியாற்றி வருவதைக் கண்டு அவர்களை பாராட்டுகிறேன்.

இங்கே உள்ள நண்பர்கள் மூலம், இந்த வட்டாரத்திலே அடிக்கடி காங்கிரஸ்காரர்களின் கூட்டம் நடைபெறுவதாக அறிந்தேன். பத்திரிகையிலே கூட கூட்டங்கள் நடத்தப்படுவதை பார்த்தேன். ஏன் இங்கே கூட்டங்கள் நடைபெறுகின்றன! இந்தப் பகுதியிலே இப்போதுதான் அரசியல் சூடு பிறந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

அந்தக் கூட்டங்களில் நம்மைப் பற்றி தாக்கிப் பேசியதாக தெரிந்தது. அவர்கள் தாக்கிப் பேசினார்கள் என்பதற்காக அவர்களை தாக்கிப் பேசக் கூடாது என்று பல தடவை சொல்லி யிருக்கிறேன்! என்னை சந்தோஷப் படுத்த வேண்டுமென்று கருதி இங்கே பேசிய பல நண்பர்கள் தாக்கிப் பேசினார்கள், இந்த முறை சந்தோஷப்படுத்துவதாகாது—வருத்தத்தைத்தான் உண்டாக்கும்.

தாக்குவதால் வெற்றி பெற முடியுமென்று நினைத்தால் அது தோல்வியைத் தான் தரும். பதிலுக்குப் பதில் பேசாது தாங்கிக் கொள்ளும் மன வலிவு தான் ஒரு இயக்கத்தின் வளர்ச்சிக்கு-வெற்றிக்கு அறிகுறி.

தாய் கோபத்தாலே குழந்தையை அடிக்கிறாள், குழந்தை தாயை அடிக்கக் கூடும். அதனாலே குழந்தை வளர்ந்து விட்டது என்று பொருள் அல்ல.

இத்தகைய இழி முறையால் வளர்ந்து விடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். நண்பர்களும் இதை உணர வேண்டும்.

மாடி வீட்டிற்கு மேலே வர்ணம் அடித்துக் கொண்டிருக்கிறான். ஏணிக்கு கீழே இருப்பவன் கடுமையாக தாக்கிப் பேசுகிறான். அதனால் மேலே இருப்பவன் 'ஆகா இப்படியா சொன்னாய், விட்டேனா பார், என்று ஏணியிலிருந்து கொண்டே கீழே விழ மாட்டான். போனது வர்ணம் அடிக்க! ஏணிக்கு கீழே இருப்பவன் எங்கேயும் போய் விட மாட்டான். ஆத்திரப்பட்டால் ஏணிகவிழும். அதைப் போல், ஏணிக்கு கீழே இருந்து ஏசுகின்றவனைப் போல மாற்றுக் கட்சியினர் தாக்கிப் பேசுகிறார்கள். பதிலுக்குப் பதில் பேசுவதல்ல, நமது நோக்கம்!

நம்மைப் பற்றி தாக்கிப் பேசுகிறவர்கள் பத்து பேர் என்றால், ஒரு வருடம் பணியாற்றினால்—முதலில் இரண்டு பேர் குறைய வேண்டும், நான்கு பேர் குறைய வேண்டும்! பத்து பேரில் ஆறு பேர் என்று குறைய வேண்டுமே தவிர, பத்து, பன்னிரெண்டாகக் கூடாது!

கடை வீதிக்கு போகிறவர்களுக்கு தெரியும். பக்கத்துக் கடைக்காரனுக்கும், அடுத்த கடைக்காரனுக்கும் சண்டை வந்தால் அடுத்தக் கடை பருப்பு ஆகாது என்பான் ஒருவன். அந்தக் கடை பருப்பு வேகாது என்பான் மற்றொருவன், இப்படி ஒருவன் ஆகாது என்பான், மற்றொருவன் வேகாது என்பான், இருவருடைய சண்டையைப் பார்த்து வேறு கடைக்கு சென்று விடுவார்கள். அதைப் போல் ஒரு கடையை திறந்து வைத்திருக்கிறார் ராஜாஜி! இந்தக் கட்சி அப்படிப்பட்டது—அந்தக் கட்சி அப்படிப்பட்டது என்று கூறி வருகிறார்,

நம்முடைய சரக்கின் நயத்தையும், தரத்தையும் சொல்லித்தான் நாம் வளர வேண்டும்!

இங்கே பேசிய புலவர் ஒருவர், ஆத்திரத்தில் சேரன் செங்குட்டுவனை அறியமாட்டீர்களா என்று கேட்டார். நூறில் 94 பேருக்கு ராமனைத் தெரியும், கிருஷ்ணனைத் தெரியும். நூறில் ஆறு பேருக்கு செங்குட்டுவனைத்தெரியும், அதிலே மூன்று பேர் இங்கே இருக்கும் செங்குட்டுவனைக் காட்டுவார்கள்! நமக்கே இத்தனை நாள் என்றால் மற்றவர்களுக்கு எத்தனை நாளாகும்?

நமது கருத்துக்களை பக்குவமாக. பண்ணிப் பண்ணிச் சொல்ல வேண்டும். உள்ளத்திலே பதியும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும்,

மாற்றுக் கட்சியினர் நடத்திய கூட்டத்தில் நம்மைப் பற்றி தாறுமாறாக பேசியதாகச் சொன்னார்கள். உங்கள் மதிப்பையும் அன்பையும் பெற்றிருக்கிற இயக்கம்வளர்வது உங்களை நம்பியேத் தவிர,மாற்றுக் கட்சிக்காரர்களை நம்பி அல்ல!

ஒருவனுக்கு பிடித்ததை மாற்றான் திட்டினால் கோபம் வரும், திட்டத் தோன்றும். நமக்குப் பிடிக்காத காரியத்தை யார் செய்தாலும் திட்டத்தோன்றும். சாப்பிட உட்கார்ந்த போது, உங்களுக்கு பிடிக்காத வெண்டைக்காய் சாம்பாரைமனைவியே போட்டாலும், ஏன் வெண்டைக்காய் குழம்பு வைத்தாய் என்றுகேட்பீர்கள். வெண்டைக்காயில் இரும்புச் சத்து இருக்கிறது என்று மனைவி கூறினால் 'முஞ்சிஇரும்பாவது,மண்ணாவது' என்பீர்கள்.

சின்ன விவகாரத்திற்கே இத்தனை கோப மென்றால், அவர்கள் இந்தியா ஒன்று என்கிறார்கள். நாம் இந்தியா ஒன்று அல்ல என்கிறோம்! மத்திய சர்க்காரின் அதிகாரத்திலே இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். நமக்கு மத்திய சர்க்கார் தேவை இல்லை என்கிறோம். அவர்கள் எதை அடிப்படையாக வைத்திருக்கிறார்களோ, எந்த அடிப்படியை நம்பிக் கொண்டிருக்கிறார்களோ அதையே ஆகாது என்றால் ஆத்திரம் வராதா? இதனாலே நமக்கு கிடைக்கிற பெருமை அவர்களுக்கு கிடைக்கவில்லையென்றால் கோபம் வராதா?

ராஜாஜியும் நேருவும் எத்தனை ஆண்டுகள் ஒன்றாக பழகியவர்கள். நேருவின் தந்தைமோதிலால் நேருவும் ராஜாஜியும் நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள். ராஜாஜியின் வயதும், அவருடைய அனுபவங்களை சொன்னால் நம்பத் தகுந்த அவரை—அவர் ஆரம்பித்திருக்கும் சுதந்திராக் கட்சியைப் பற்றி நேரு 'பல் போன கிழவர் கட்சி' என்றார். ராஜாஜி பதிலுக்குப்பதில் அவர்களுக்கு இருப்பது இயற்கையில் பல் அல்ல. செயற்கை! என்றார். ஒன்றாக இருந்து பழகியவர்களுக்குள்ளேயே கோப தாப உணர்ச்சி உண்டாயிருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் நம்பிக் கொண்டிருக்கிற அடிப்படைக் கருத்தை மறுத்துப் பேசுவதால் தான் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது! அதனாலே நம்மை ஏசுகிறார்கள்.

நீங்கள் இங்கே கூட்டத்தைக் கேட்கிறீர்கள். உங்கள்வீட்டிலே இருக்கும் பெரியவர்கள் கேட்டதில்லை. வீட்டிற்கு போனதும் பாட்டனா—இந்த அண்ணாத் துரை என்ன பேசினான் என்று கேட்டால் நன்றாகப் பேசினார் என்பீர்கள். மீண்டும் அவர் என்னத்தை தான் பேசினான் என்று கேட்டால் மறுபடியு நீங்கள் இதே பதிலை சொன்ன சலித்துக்கொண்டு 'என்ன பே யிருக்கப் போகிறான்' என்பார் நான் சொல்லுகின்ற கருத்து கள் உங்கள் காதில் விழுந்த உள்ளத்தில் எப்படி பதிந்ததே அப்படி அவர்கள் உள்ளத்தி யும் பதிய வேண்டும்.

மாடு வளர்க்கின்றவர்க பாலை கறக்கா விட்டால் மாடுக்கு ஒன்றும் நஷ்டமில்லை-நஷ்டம் நமக்குத்தான்!

காங்கிரஸ்காரர்கள் தவறு பேசுகிறார்களா—பேசட்டு கவலைப்படாதீர்கள்!

(6-ம் பக்கம் பார்க்க)

# 50 ஆண்டுகளில் காங்கிரஸ் அடையாத அரசியல் அந்தஸ்தை 10 ஆண்டுகளில் நமது கழகம் பெற்றிருக்கிறது!

## மாற்றார் தூற்றுதலுக்கு மன அதிர்ச்சி அடையாதீர் !

(5-ம் பக்கம் பார்க்க)

(அண்ணா பேச்சு)

உங்களுக்கு கொஞ்சம் யூகம் வேண்டும். அவர்கள் கூட்டம் கூட்டி திட்டிய போது கூடியிருந்தவர்கள் எத்தனை பேர்? அவர்கள் அடக்க ஒடுக்கமாக நாற்பது ஐம்பது பேர் கூடினார்கள்! நீங்கள் கூட்டம் கூட்டியிருக்கிறீர்கள்! நாலைந்து தெருக்களிலே ஏராளமான பேர் கூடியிருக்கிறார்கள். இங்கே அவர்களைப் பற்றி, அவர்கள் இப்படி திட்டினார்கள், அப்படித் திட்டினார்கள் என்று சொல்வதிலே அர்த்தமில்லை. அவர்கள் கூட்டம் கூடிய போது கேட்டது யார்? எத்தனை பேர் இருந்தார்கள்!

நல்ல பாடகரின் பாட்டைத்தான் கிராமபோன் பிளேட்டாக்குவார்கள். எந்தப் பாடகனும் கிராமபோன் பிளேட்டை பாட மாட்டான், யார் பாடுவார்கள்? நம் வீட்டு குழந்தை தான் பாடும்!

காமராசரே அதை ஒப்புக்கொள்கிறார். கூட்டம் குறைவு தான் என்பதை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்ளும் போது, எதற்காக அவர்களைப் பற்றி பேசுகிறீர்கள், என்ன காரணம்! அவர்கள் தாக்கிப் பேசுகிற போது அதற்கு இந்த பதில் தரலாம். இதற்கு இப்படி பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

அவர்கள் நமது இயக்கக் கொள்கைகைப் பற்றி பேசினால் அதற்குத்தான் பதில் சொல்ல நினைக்க வேண்டுமே தவிர, இயக்கத் தலைவர்களைப் பற்றி பேசினால் மறந்து விடவேண்டும்! எப்படித் தூற்றினாலும் தூற்றுவதால் மட்டும் எந்த இயக்கமும் அழிந்து விடாது.

காந்தியார் இங்கிலாந்துக்குச் சென்றபோது சர்ச்சில் கேட்டாராம் அரை ஆடை அணிந்த அந்த மனிதரை ஏன் உள்ளே அனுமதித்தீர்கள் என்று அரை ஆடை மனிதர் என்று சொன்ன சர்ச்சில் தான் அரை ஆடை அணிந்த காந்தியிடத்தில் சுயராச்சியத்தைக் கொடுத்தார். அரை ஆடை மனிதர் என்று சொல்லிவிட்டார் என்றகாரணத்தால் காந்தி. முழுஆடை அணியவில்லை.

மாற்றார் திட்டிப் பேசுகின்ற நேரத்தில்மன அதிர்ச்சியடையக் கூடாது. கடந்த பத்து வருடத்திலே நாம் ஏற்றுக் கொண்ட ஏச்சுக்களைப்போல் எந்த இயக்கமும் தாங்கிக் கொண்டதில்லை.

திராவிடர் கழகமாக இருந்த போதும், ஜஸ்டிஸ் கட்சியாக இருந்த போதும் எப்படித் தூற்றினார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக இருந்த சர். தியாகராயர் வீட்டிற்கு முன்னாலே நின்று கற்களை வீசியெறிந்தார்கள். அவருடைய மனைவியார் வெளியே வந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டபின்னும் கற்களை வீட்டின்மேல் வீசினார்கள்.

பனகல் அரசர் இறந்துபோன பிறகு மாற்றார், சர்க்கரை பொட்டலங்கள் கொடுத்தார்கள். 'ஒழிந்தான் பனகல் ராஜா' என்று கோஷமிட்டார்கள். இப்படித்தான் நாம் வளர்ந்து வருகிறோம். நலுங்கு வைத்து வரவழைக்கப் பட்ட மாப்பிள்ளை அல்ல, நம் கழகம். தூற்றி தூற்றிப்பேசினாலும் தாங்கிக் கொள்ள பழக்கப் பட்டவர்கள் நாம். இப்போது தூற்றுகிறவர்கள் வண்டிக்காரன் பாஷையிலே பேசுகிறார்கள். 'ஏ...வா...உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று.

அந்த காலத்தில் வெளிவந்த 'தேசபந்து' என்னும் பத்திரிகை பன்னிரெண்டு பக்கம் இருக்கும். பன்னிரெண்டு பக்கத்தில் பத்து பக்கம் பெரியாரை திட்டி எழுதப்பட்டிருக்கும் "ராமனையும் கிருஷ்ணனையும் திட்டுகிற நீ ஏன் ராமசாமி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாய். கல் என்று வைத்துக்கொள்வது தானே, மண் என்று வைத்துக் கொள்வது தானே" என்று இப்படியெல்லாம் எழுதியிருப்பார்கள்.

ஒரு சமயம் பெரியாரும் நாகம்மையாரும் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது கூட்டத்தில் ஒருவன் 'பொது உடமை! பொது உடமை என்று பேசுகிறீர்களே! உங்கள் பக்கத்திலே இருக்கும் அம்மையாரும் பொது உடமை தானா?' என்று கேட்டான். அப்படிப்பட்ட தாக்குதலை தாங்கிக்கொண்டால்தான் இன்று எண்பது வயதுள்ளபெரியார் நம் பக்கம் இருக்க மாட்டாரா என்று பல கட்சிக்காரர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். சொன்னவன் யார்? அவன் செத்து புல் முளைத்து பத்து ஆண்டுகளாகி விட்டன! அவர் பரம்பரையிலே வந்தவர்களாகிய நாம், மாற்றார் தாறுமாறாக பேசினால் வருத்தப் படக் கூடாது. பத்து ஆண்டுகளில் நாம்பெற்றிருக்கும் வளர்ச்சியைக் காணுகின்ற போது யாருக்கும் ஆத்திரம் வரும்.

நல்ல சட்டை அணிந்து கொண்டு வீதியிலே செல்லுகின்றவனை பார்த்து, அதே போல் துணி எடுத்து சட்டை தைத்து சாயம் போய் இருந்தால் 'இவனுக்கு எப்படி இந்த துணி கிடைத்தது? நமக்கு கிடைக்கவில்லையே என்று ஆத்திரப்படுகிறான். புதிய பணக்காரனை பார்த்து, பழைய பணக்காரன் ஆத்திரப்படுகிறான். மாடி வீட்டுக்காரனைப் பார்த்து ஓட்டு வீட்டுக்காரன் ஆத்திரப்படுகிறான், காரிலே போகின்றவனைப் பார்த்து நடந்து போகின்றவனுக்கு ஆத்திரம்! பெரிய உத்தியோகஸ்தனைப் பார்த்து சிறிய உத்தியோகஸ்தர்களுக்கு ஆத்திரம். ஐம்பது ஆண்டு காலத்தில் காங்கிரஸ் அடைய முடியாத வளர்ச்சியை பத்து ஆண்டுகளில் பெற்றிருக்கிறோம் என்பதால் தான் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது!

பத்தாண்டு காலத்தில் காங்கிரஸ் பெற்ற வளர்ச்சியைப் போல் ஐந்து மடங்கு, பத்து மடங்கு வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம்.

அவர்கள் சட்ட சபைக்கு வரவே முப்பது ஆண்டுகளாயிற்று. பல பேர் சிறை சென்று—பலர் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாகி—பலர் பலவித தொல்லைகளுக்கு ஆளாகி—சூரத்திலே மாநாட்டை கூட்டி சட்ட சபைக்கு போகலாமா, போகக் கூடாதா என்று முடிவெடுக்க, மாநாட்டில் கூடியிருந்தோரில் பாதி பேர் கூடாது என்று மறுக்க, குழப்பம் ஏற்பட்டு செருப்புகளை வீசி கலவரம் செய்தனர். பாதி பேர் வெளியே நிற்க, பிறகு சட்ட சபைக்கு போனார்கள்,

நாம் பத்து ஆண்டுகளில் சட்ட சபை தேர்தலுக்கு போட்டியிட்டு பதினேழு லட்சம் வாக்குகளை பெற்று பதினைந்து பேர் சட்ட மன்றத்திலும், பாராளு மன்றத்தில் இரண்டு பேரும், நகராட்சி மன்றத்திலே ஆளுங் கட்சியாக இருக்கிறோம். இதைக் காணும் போது யாருக்குத் தான் ஆத்திரம் வராது—கோபம் வராது!

தீபாவளிக்கு புது சட்டை அணியவேண்டுமென்று தையற்காரனிடத்தில் ஒருவன் ஒரு சட்டைக்கு துணி கொடுக்க, பக்கத்து வீட்டுக்காரன் மூன்று சட்டைகளுக்கு துணி கொடுக்கிறான், தையற்காரன் தீபாவளிக்கு முன்னமேயே மூன்று சட்டை தைத்து கொடுத்து விட்டு, மற்றொருவனுக்கு தீபாவளி கழித்து பத்து நாட்களுக்கு பிறகு சட்டை தைத்துக் கொடுத்தால் எப்படி ஒரு சட்டைக் கேட்டவனுக்கு கோபம் வருமோ அப்படிப்பட்ட கோபம் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறது.

காங்கிரஸ்காரர்கள் தண்டி யாத்திரை செய்தார்கள். உப்பு சத்தியாகிரகம் நடத்தினார்கள், இரண்டு மூன்று வட்ட மேஜை மாநாடு கூட்டினார்கள்! இப்படி பல செய்த பின்பு தான் அவர்கள் அரசியல் 'அந்தஸ்தை பெற முடிந்தது. நமக்கு அரசியலில் அந்தஸ்து பத்து ஆண்டுகளில் கிடைத்து விட்டது. அதனாலே அவர்களுக்கு ஆத்திரம்! நமதுவளர்ச்சிக்கு தலைவர்களின் தனித் திறமை அல்ல காரணம்! நம்மவர்களிலே பேசத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். பாடத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அதனாலே தான் நமது இயக்கம் வளர்ச்சி யடைகிறது என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அது அல்ல காரணம். இயக்கத்தை ஆரம்பித்த காலத்திலே நம்மிடத்திலே பாடக் கூடியவர்கள் இல்லை! இயக்கத்தை ஆரம்பித்த போது நமது செய்திகளை வெளியிடுவதற்கு பத்திரிகை இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தோம்,

நமது இயக்க கோள்கையை பாடத்தெரிந்தவர்களை கொண்டு பாட. வைத்தோம்! நமது செய்திகளை மக்களுக்கு தெரிவிக்கநாமே பத்திரிகையைத் துவக்கினோம்.

நமது பத்திரிகைகளுக்கு விளம்பரம்தரப்படுவதில்லை என்பதற்காக விளம்பர காரியாலயங்களை நாமே ஆரம்பித்தோம்! விசுவாமித்திரன் திரிசங்குவிற்கு சொர்க்கம் அமைத்துக் கொடுத்தான் என்று புராணத்திலே கதை உண்டு,

அதே போல் நாம், நமக்காக ஒரு திரிசங்கு சொர்க்கத்தை உண்டாக்கிக் கொண்டோம்.

விசுவாமித்திரன் உண்டாக்கிய சொர்க்கத்திலே திரிசங்குவுக்கு ஒன்றும் நன்மை இல்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு கேட்பது பதவி வேட்டைக்காக அல்ல!

## காங்கிரஸ் கட்சி பதவிக்கு வருவதற்கு முன்பிருந்தே நாம் திராவிட நாடு கேட்டு வருகிறோம்!

6-ம் பக்கத் தொடர்ச்சி

[அண்ணா பேச்சு]

நாம் உண்டாக்கிய சொர்க்கம் நமக்கு நன்மையை கொடுத்திருக்கிறது. நாம் உண்டாக்கிய தனி உலகம் நாளாக நாளாக வளர்கிறது!

உங்களுக்கு விஞ்ஞானம் தெரியும். ஒரு கிரகத்தோடு மற்றொரு கிரகம் உராய்கிறபோது அதிர்ச்சி ஏற்படும். நமது செல்வாக்கு, நாம் உண்டாக்கிய தனி உலகம் அவர்கள் உலகத்தோடு மோதுகிற போது இப்படிப்பட்ட அதிர்ச்சி உண்டாகிறது!

நான் தமிழ் நாடு பூராவும் சுற்றுப் பயணம் செய்து விட்டு சொல்லுகிறேன். அவர்கள் திட்டுவதாலே, அவர்கள் தாக்கிப் பேசுவதாலே தமிழ் நாட்டில் உள்ள எந்த ஊரிலும் நமது வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படவில்லை.

நமது எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகிறது. அவர்கள் பேசியதற்கு நான் பதிலுக்குப் பதில் பேசவில்லை, தாங்கிக் கொள்கின்ற மன வலிவும் ஆற்றலும் பெருக வேண்டும் அப்படி உண்டானால்தான் சிறந்த வளர்ச்சியை பெற முடியும்.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுகிறோம். திராவிட நாடு பிரச்னை அவர்களுக்கு புரியாததற்கு மூன்று காரணங்களை சொல்லுவேன்.

நாம் சொன்னதை தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். பதவி கிடைக்கவில்லையே என்ற ஆத்திரத்தில் திராவிட நாடு கேட்பதாக காங்கிரஸ்காரர்கள் எண்ணுகிறார்கள். அந்த தவறான எண்ணத்தை நீங்கள் மாற்ற வேண்டும்.

காங்கிரஸ் கட்சி பதவிக்கு வருவதற்கு முன்னமேயே நாம் திராவிட நாடு வேண்டுமென்று கேட்டோம். அப்போது தமிழ் நாடு தமிழருக்கே என்று கேட்டு தமிழ் நாட்டின் எல்லைகளையும் சொன்னோம். அப்போது இந்த நாட்டை ஆண்டவர்கள் இவர்கள் அல்ல; வெள்ளைக்காரன் ஆண்டான். அப்போது ஆனந்த விகடன் கார்ட்டூன் போட்டு 'எலி வளை எலிகளுக்கே' என்று கிண்டல் புரிந்தது. அப்போது நாம் சொன்ன திராவிட நாடு வாண வேடிக்கை மத்தியிலே பாடிய தேவார பஜனை போல் இருந்தது.

வாண வேடிக்கை நடத்துகிற போது தேவார பஜனை காதில் விழாது. இதை திருவிழாக்களிலே பார்த்தால் தெரியும்.

சாமியை அலங்கரித்து தூக்கிச், செல்வார்கள், சாமிக்கு முன்னாலே நாயன கச்சேரி நடைபெறும். அதற்கு முன்பு வாண வேடிக்கை நடைபெறும், வாண வேடிக்கை சத்தத்தில் நாயண கச்சேரியும் கேட்காது — பாடிக் கொண்டு வருகிற தேவார பஜனையும் கேட்காது!

சாமி, அடுத்த தெருவுக்கு திரும்பி அந்தத் தெரு முனையிலே நிற்கும். அங்கு வாணவேடிக்கை நின்ற, பிறகு தான் தேவார ப்ஜனை கேட்கும்,

அப்போது நாம் சொன்ன தேவாரம், வான வேடிக்கை நின்ற பிறகு இப்போது கேட்கிறது! கீழே விழுந்த வெறும் வாணக் குழாயை எடுத்து வைத்துக் கொண்டு உனக்கா எனக்கா என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தான் புதிதாதக் கேட்கிறோமென்றும் நினைக்கிறார்கள்.

தமிழ் நாட்டு அரசியலை படித்துப் பார்த்தால் இது புரியும். நாம் கேட்பது இன்று புதுமையாக காங்கிரசுக்கு தெரிகிறது.

திராவிடநாடு திராவிடருக்கே என்று கேட்ட போது திராவிட நாடா என்று கேட்டார்கள். இப்போது அந்தக் கட்டம் போய், திராவிட நாடு பிரிந்தால் வாழுமா என்று கேட்கிற கட்டத்திற்கு வந்திருக்கிறார்கள்.

இந்தக் கட்டத்திற்கு அவர்கள் வந்திருப்பது கண்டு மகிழ்ச்சி! நாம் சொல்லுகிற திராவிட நாடு புரிகிறது. அவர்களுக்கும் பிடிக்கிறது!

பெண் பார்த்தாகி விட்டது திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டும். திருமணத்தை ஏழாம் தேதி வைத்துக் கொள்ளலாமா. பத்தாம் தேதி வைத்துக் கொள்ளலாமா என்று கேட்க ஜோதிடனிடத்திலே போகிற அந்தக் கட்டத்திற்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். அந்தக் கட்டத்திற்கு அவர்கள் வந்திருப்பது மகிழ்ச்சியே தவிர, ஆத்திரமல்ல!

சென்ற தடவை நடந்த சட்டசபையிலே நிதி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் மத்திய சர்க்காரின் பேருதவியால் கிண்டியில் கட்டப்பட்ட பொறியியல் கல்லூரியை திறந்து வைத்து விட்டு அதைப் பற்றி சட்டசபையில் பேசும் போது—"மத்திய சர்க்காரோடு போராடி அரும்பாடுபட்டு கிண்டியிலே பொறியியல் கல்லூரியை கட்டி முடித்திருக்கிறோம். கேரளத்தாருக்காக, கன்னடத்தை சார்ந்தவர்களுக்காக ஆந்திரருக்காக என்று சொல்லி நிறுத்திஎன்னைப் பார்த்து சிரித்து அண்ணாத்துரை பாணியிலே சொல்ல வேண்டுமானால் திராவிட நாட்டிற்காக!" என்று கூறினார்.

அதை இங்கே நான் கூறும் போது 'நான் வேடிக்கைக்காகச் சொன்னேன். அதை அரசியல் பிரச்னையாக ஆக்கிக் கொள்ளலாமா' என்று சொல்லக் கூடும், முன்பு நாடே இல்லை என்று கூறினார்கள்.

திராவிடம்-தமிழ் இலக்கியத்திலே காட்டினோம், கல் வெட்டுகளிலே இருந்து காட்டினோம். அவர்கள் பாடுகின்ற 'ஜனகன மன' தேசிய பாடலிலே இருப்பதைக்காட்டினோம். மகாபலிபுர சிற்பங்களிலே இருந்து காட்டினோம். எத்தனையோ ஆதாரங்களை காட்டிய பிறகு இன்று கேட்கிறார்கள் பெற முடியுமா என்று.

கல்யாணம் நடைபெறுவதற்கு எல்லா ஏற்பாடுகளை செய்து விட்ட பிறகு, கல்யாணம் ஆவதற்கு முன்னால் மாப்பிள்ளையை அழைத்து குடும்பம் நடத்துவாயா என்று கேட்டால் சாந்த குணம் படைத்தவனாக இருந்தால் நடத்துவேன் என்பான் கொஞ்சம் கோபக்காரனாக இருந்தால் உன்னால் குடும்பம் நடத்துகின்ற போது நானும் நடத்துவேன் என்பான். ஆத்திரக்காரனாக இருந்தால் குடும்பம் நடத்த உன்னால் முடியுமா என்று கேட்டால் சரி தான் போய்யா என்று சொல்வான். இங்கே பேசிய தோழர்களும் மூன்றும் தரத்திலே பதில் சொல்லி விட்டார்கள்,

அவர்கள் சுயராஜ்யம் கேட்ட போது வெள்ளைக்காரன் இதே போல் தான் கேட்டான். கப்பல் ஓட்டத் தெரியுமா, ராஜாங்கம் நடத்த தெரியுமா என்று. உன்னிடத்திலே இருக்கிற கப்பல் கோயில் குளத்திலே மிதக்கும் தெப்பல். நீ வைத்திருக்கும் துப்பாக்கி வாண வேடிக்கை, நீ வைத்திருக்கும் விமானம் பறக்கும் காற்றாடி என்றார்கள். இதே போல் அவர்கள் நம்மை பார்த்துக் கேட்கிறார்கள். அவர்களைக் கேட்டவன் இங்கிலாந்துக்கு போய் விட்டான்.

ஒரு கடையில் பதினைந்து ஆண்டுகளாக குமாஸ்தா வேலை செய்து கொண்டிருப்பவன் பதினைந்து ஆண்டுகள் உழைத்த பிறகு தனிக் கடை வைக்க விரும்பினான். அந்தக் கடையை பழைய யஜமானனைக் கொண்டுதிறக்கவேண்டுமென்று கருதி-தனிக் கடை வைக்கப்போகிறேன். நீங்கள் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டால், அந்த யஜமானன் குமாஸ்தாவைப் பார்த்து தனிக் கடையா, நீயா, பிழைப்பாயா, வாழ முடியுமா என்று கேட்பான். அதைப் போல் நாம் இன்று தனி நாடு கேட்கிறோம்—தனிக் கடை அல்ல! அதற்கு இவர்கள் விடுவார்களா? காரணம் வெள்ளைக்காரன் அவ்வளவு பாடுபடுத்தி விட்டான் அவர்களை. அவர்கள் கேட்ட கேள்விக்கணைகளை திருப்பிக் கேட்க வேண்டாமா?

அதற்காக திராவிட நாடா, பிரிந்தால் வாழ்வீர்களா, வாழ முடியுமா என்று திருப்பிக் கேட்கிறார்கள்.

காந்தி சுயராஜ்யம் கேட்ட போது, வெள்ளைக்காரன் 'நான் ஆள்வதிலே என்ன தவறைக் கண்டீர்கள்' என்று காந்தியைப் பார்த்துக் கேட்டான். காந்தி, "எங்கள் ஆட்சியைவிட நல்ல ஆட்சி இருக்க முடியாது" என்று பதில் கூறினார்.

மனித அழகுதான் பயன்படுமே தவிர, சினிமா போஸ்டர் அழகு கனவுக்குத்தான் பயன்படும். அதைப்போல் நாட்டிற்கு நல்ல ஆட்சிதான் பயன்படும்.

உனக்கு ஆடசி செய்யத் தெரியுமா, கப்பல் விடத் தெரியுமா, விமானம் ஓட்டத் தெரியுமா என்று கேட்ட வெள்ளைக்காரன் தான், விமானம் ஓட்டத் தெரியாதவர்களுக்கு விமானத்தை ஓட்டக் கற்றுக் கொடுத்தான். அதற்காக ஒரு கல்லூரியையும் கட்டிக் கொடுத்தான்!

பீரங்கி சுடத் தெரியாதவனுக்கி சுடக் கற்றுக் கொடுத்து அதற்காக ஒரு கல்[illegible] கட்டிக் கொடுத்து விட்[illegible] வெள்ளைக்காரன் சுய[illegible] கொடுத்து விட்டுப் போ[illegible] அதை வாங்கிக் கொண்[illegible] களுக்கு அதை சரியா[illegible] படுத்த தெரியவில்லையே[illegible]

ஆளத் தெரியுமா என்று கேட்பதைவிட, கொடுத்துப் பார்! கொடுத்துப் பார்த்தால்தான் முடியும். வேண்டுமானால் இத்தனை ஆண்டுகள் ஆட்சி செய், பிடித்தால் தருகிறோம், இல்லையென்றால் மறுபடியும் வாங்கிக் கொள்வோம் என்று ஒப்பந்தம் செய்து கொடு!

திராவிட நாடு திராவிடருக்கே என்பது எங்களுக்காக மட்டுமல்ல, திராவிட கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மட்டுமல்ல! திராவிட நாடு கொடுத்தால் ஆள முடியுமா என்று கேட்கிறார்கள். நிச்சயமாக எங்களால் ஆள முடியும். ஆளுகிற வேலை மட்டுமல்ல சரியாக நடக்கிறதா என்று பார்ப்போம்! ஆளுகின்ற வேலையைவிட சரியாக நடக்கிறதா என்று பார்ப்பது அதைவிட சிலாக்கியமான வேலை!

இந்தியாவை ஆளுகின்ற போது திராவிடத்தை எங்களால் ஆள முடியாதா? யானை

(8-ம் பக்கம் பார்க்க)

# நாம் உண்டாக்கிய தனி உலகம் நாளுக்கு நாள் வளருகிறது!

(அண்ணா பேச்சு)

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

யைக் கட்டி ஆளும்போது பூனைக் குட்டியை வைத்து எங்களால் ஆள முடியாதா?

நாங்கள் கேட்கின்ற திராவிடத்தை நீங்கள் கொடுத்து, தனி நாட்டை எங்களால் ஆள முடியவில்லை என்றால் குத்தகைக்கு விட்டு விடுகிறோம். ஒப்பந்தத்திற்கு வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறோம். நீங்கள் கொடுப்பதற்கு முன்னே, ஆள முடியாது என்றுமட்டும் சொல்ல வேண்டாம்!

திராவிட நாடு எப்படிக் கிடைக்கும் என்று கேட்கிறார்கள். அலாவுதீன் விளக்கைப் போல நாங்கள் விளக்கை வைத்துக் கொண்டு—பூதத்தை வரவழைத்து கொண்டா திராவிட நாடுப் என்று சொல்ல, திராவிட நாட்டை புரசவாக்கத்திலே வைக்கலாமா, வேறு இடத்தில் வைக்கலாமா என்று நினைப்பது போல அவ்வளவு சுலபத்தில் கிடைப்பதல்ல திராவிட நாடு. மன உறுதியிருந்தால் திராவிட நாடு கிடைக்கும். உறுதியில்லா விட்டால் கிடைக்காது!

சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் இந்தியாவிலே இருக்கிற நாற்பது கோடி மக்களும் மூச்சு விட்டால் இங்கிலாந்து புயலிலே சிக்கியதுபோல் தத்தளிக்கும். இங்கே இருக்கிற நாற்பது கோடி மக்களும் காரித் துப்பினால் அதிலே இங்கிலாந்து கவிழ்ந்து விடும் என்று காங்கிரஸ்காரர்கள் பேசினார்கள். அதைக் கேட்டு கைத்தட்டினார்கள். நானும் அப்படிச் சொல்ல முடியும். நீங்களும் கைத்தட்டுவீர்கள் அது எனக்குத் தெரியும்! 'தந்தையர் நாடென்னும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாரதி சொன்னான். பேச்சிலே எப்படி சக்தி பிறக்கும் என்று கேட்பார்கள். நம்பிக்கை இல்லாதவர்களுக்கு இது புரியாது. 'திராவிட நாடு' என்று சாதாரணமாக சொல்வதிலே சக்தி பிறக்காது 'என்னுடைய நாடு திராவிட நாடு' என்று அழுத்திகூறினால் அதிலே ஒரு சக்தி பிறக்கிறது. எப்படி கிடைக்காமல் போகும்?

பம்பாயும், குஜராத்தும் இரண்டாக பிரிக்கப்பட வேண்டுமென்று கிளர்ச்சி நடைபெற்றது அப்போது முதலமைச்சராக மொரார்ஜி தேசாய் இருந்தார்.

இரண்டாக பிரிப்பது கேடு, குஜராத்திக்கும் மராட்டியர்களுக்கும் பேதம் காட்டக்கூடாது என்று கூறியபோது பிரிவினையை கோரியவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். ஆட்சியாளர்கள், கிளர்ச்சியின்போது துப்பாக்கியால் சுட்டனர்—தடியால் அடித்து துன்புறுத்தினர். இந்த கொடுமைக்கு பிறகு நேரு ஆமதாபாத்தில் பேசச் சென்றார். அவர் பேசும்போது கிளர்ச்சிக்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒன்னே முக்கால் மணி நேரம் எவ்வளவோ முயற்சித்தும் நேருவால் பேச முடியவில்லை.

காங்கிரஸ்காரர்களை துரத்தி துரத்தி அடித்தார்கள். கதர் தொப்பியையும், கதர்கொடியை கொளுத்தி அமர்க்களம் செய்தபோது நேரு 'யார் வந்தாலும், என்ன செய்தாலும் 'பிரிக்க முடியாது' என்றார், இப்போது பிரித்துக் கொடுக்க முன்வந்திருக்கிறார்.

பம்பாயிலே துப்பாக்கிப் பிரயோகம்—அடிதடி நடைபெற்றபோது பிரிக்க முடியாது என்று கூறிய அதே நேரு, 'பிரிக்கத்தான் போகிறோம். யாரும் தடுக்க முடியாது என்கிறார்,

ஒரே ஆர்மோனியத்தில் பல சத்தங்கள் எழுவது உங்களுக்கு தெரியும். எந்த ரீடை அழுத்தினால் எந்த சத்தம் வரும் என்பது ஆர்மோனியம் வாசிப்பவனுக்குத்தான் தெரியும். நேருவுக்கு தெரியும் நேரு முன்னாலே அழுத்திய ரீட் 'இப்போது பிரிக்கமுடியாது' என்கிற சத்தத்தைக் கொடுத்தது. இப்போது அழுத்திய ரீட் 'யார் தடுத்தாலும் பிரிக்காமல் இருக்க முடியாது' என்கிற சத்தத்தைக் கொடுத்திருக்கிறது. இந்தி திணிப்பை எதிர்த்து நாம் கூறிய போது இந்தியை எதிர்ப்பவர்கள் பிடிவாதக்காரர்கள். இந்தி இந்தியாவின் மொழி, இங்கிலீஷ் அன்னியனுடைய பாஷை என்றார். இப்போது அவர் இந்தி மொழி இப்போதுதான் வளர்கின்ற மொழி. ஆங்கிலத்தையா வெறுக்கிறீர்கள் என்று கூறுகிறார்.

நேரு நம் வீட்டிலே இருக்கும் பெரியவர்களைப்போல.

எனக்கு தெருக்கூத்து பார்க்க வேண்டுமென்பதிலே மெத்த ஆர்வமுண்டு. பத்து பன்னிரெண்டு வயதாக இருக்கும் போது எங்கள் வீட்டு தெரு முனையிலே கூத்து நடக்கும். கூத்து பார்க்க வேண்டுமென்று என் தாத்தாவிடம் கூறுவேன். கூத்துப் பார்க்கக் கூடாது என்று தாத்தா தடுத்து விடுவார். எங்கே போய் விடுவேனோ என்று நினைத்து அறைக்குள் தள்ளி தாழ்ப்பாள் போட்டு விடுவார்!

தாளம் தட்டி—மிருதங்க சத்தம் எழுந்ததும், கூத்து நடக்கின்ற காட்சிகள் மனக்கண்முன் தோன்றும். நான் ரசித்துக் கொண்டிருப்பேன். சிறிதுநேரம் கழித்து என் தாத்தா கதவைத் திறந்து என்னை கூத்து நடக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்வார். என் தாத்தாவுக்கு செல்வாக்கு இருந்த காரணத்தால் முன்னாலே அவர் என்னை உட்கார வைத்து விட்டு அவரும் ரசிப்பார். என்னுடைய தாத்தா என்ன செய்தாரோ அதேபோல் தான் நேருவும் இப்போது செய்கிறார்.

இந்தியை எதிர்த்தபோது தேசிய மொழி என்றார். இப்போது இந்தி வளர்கின்ற மொழி என்கிறார். தவறு என்று தெரிந்தால் விலகி விடுபவர் நேரு.

சீன நாட்டில் நேரு சுற்றுப் பயணம் செய்தபோது 'இந்தோ சீனி பாய் பாய்' என்று கூறினார். அப்போது நான் 'திராவிட நாடு' பத்திரிகையில் 'இந்தோ சினி பாய் பாய் என்று கூறுகிறீர்கள். சீக்கிரத்திலேயே 'சோர்—சோர்' என்று கூச்சலிடப் போகிறீர்கள் என்று எழுதினேன். இப்போது சீனர்கள் இந்திய எல்லையிலே இருக்கிறார்கள், நேரு 'சோர், சோர்' என்று கூவிக் கொண்டிருக்கிறார்.

நாம் நமது கொள்கையிலே உறுதியோடு இருக்க வேண்டும். எதிர்ப்பவர்கள் எப்படி இருந்தாலும் இருந்து போகட்டும். நமது கொள்கையிலே நம்பிக்கை வைத்து பணியாற்றினால் நம் கருத்து வெற்றி பெறுவது நிச்சயம் என்று கூறி, நண்பர்கள் நம்பிக்கையோடு பணி புரிந்து நமது லட்சியத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

# திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது!

மதுரை மாவட்டத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு 29-11-59 ஞாயிறன்று எ. வி. எஸ். எஸ். ரைஸ் மில் காம்பவுண்டில் மிகப்பெரிய அளவில் அலங்காரமாக அமைக்கப்பட்டிருந்த பேராசிரியர் சண்முகம் பந்தலில், டாக்டர் தருமாம்பாள் அரங்கில் நடைபெற்றது. மாநாட்டு நிகழ்ச்சிகள் காலை 10-மணியளவில் தொடங்கின. தொடக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்கன் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவு 'டேப்ரிகார்டு' மூலம் ஒலி பரப்பப்பட்டது.

வரவேற்புக் குழுத் தலைவர் கு. இந்திரசித்து அவர்கள் வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று அழகியதோர் உரை நிகழ்த்தினார். திரு. பீ. எஸ். மணியன் பி.ஏ., அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்து திறப்புரை ஆற்றினார்கள். திரு. கே. ஏ. கிருட்டிணசாமி பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களைத் தலைமையேற்கும்படி மாநாட்டுச் செயலாளர் கொ. வெற்றிவேந்தன் முன்மொழிய, தோழர்கள் டி. கே. பொன்னுவேலு, கோவை செழியன், நெடுமாறன், என். வி. என். சோமு, தமிழ்ச் செல்வன், சாமி, மாரவேள் ஆகியோர் வழி மொழிந்தனர். தலைமையேற்று திரு. கிருட்டிணசாமி அவர்கள் கருத்தாழம் நிறைந்த அரியதொரு முன்னுரை நிகழ்த்தினார்கள்.

பின் தோழர்கள் இராசகுமார் பீட்டர், 'ஹோம்லண்டு' எம். எஸ். வெங்கடாசலம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மழை காரணமாக பகல் 1 மணி ஆன பின்பும் இடைவேளை இன்றி மாநாடு தொடர்ந்து 5 மணிவரை நடைபெற்றது.

தோழர்கள் 'தென்றல்' துணை ஆசிரியர் மா. பாண்டியன், தங்கப் பாண்டியன், அழகிரிசாமி, என். வி. என். சோமு, கி. கிருட்டிணன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர்.

மாநாட்டுச் செயலாளர், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் முதலிய தலைவர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார். பின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து மலைச்சாமி, டி. கே. பொன்னுவேலு, கோவை செழியன், மாணவர் பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இறுதியில் வரவேற்புக் குழுத் தலைவர் கு. இந்திரசித்து நன்றி கூற மாநாடு மாலை 5-மணி அளவில் இனிது முடிவடைந்தது. காலை 8-மணிக்கு தொடங்கி மாநாடு முடியும்வரை திரளான மாணவர்களும், பொது மக்களும் பசியையும் பொருட்படுத்தாமல் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் இருந்து மாநாட்டைச் சிறப்பித்தது குறிப்பிடத் தக்கது.

பாரகனில்

20—12—59 ஞாயிறு காலை 10 மணிக்கு

நேஷனல் பிக்சர்சாரின்

**ரத்தக்கண்ணீர்**

நடிகவேள் M. R. ராதா, M. N. ராஜம், சந்திரபாபு

இலட்சிய நடிகர் S. S. ராஜேந்திரன் நடித்தது.

# நாம் தியாகத்தால் ஒட்டப்பட்டிருக்கிறோம்!

## அவர்கள் பர்மிட்டுக்காக ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

[அண்ணா பேச்சு]

பத்தில் எடுத்துவிடவும் செய்யலாம்! மண் வைத்துப் பூசி கட்டினால் மழையில் கரைந்து வீழ்ந்து விடும்! சுண்ணாம்பு பூசினால் கூட மழைக்குத் தாங்காது! சிமிட்டியால் ஒட்ட வைத்தால் அதை அசைக்க முடியாது, ஆட்ட முடியாது!

நீங்கள் எப்படி ஒட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்! நாம்சிந்திய ரத்தத்தைக்கொண்டு ஒட்டப்பட்டிருக்கிறோம்! செய்த தியாகத்தால் ஒட்டப்பட்டிருக்கிறோம்! அவர்கள்ஒட்டிக்கொண்டிருப்பது பர்மிட்பெறுவதற்காக! தேவராஜன் சிந்திய ரத்தமும், அப்துல்காதர் செய்த தியாகமும் மற்றும் நம் தோழர்கள் அடைந்த இன்னல்களும் சாதாரணமானது அல்ல! எனவே நம்மை எவராலும் பிரிக்க முடியாது, எதைக் காட்டியும் நம்மை இழுக்க முடியாது!

நான் அன்பழகன் வீட்டில் இருந்த சமயம் "கார்ப்பரேஷனில் நம்முடைய தோழர்கள் வெற்றி பெற்று விட்டார்கள்" என்ற செய்தியை அறிந்தேன்! இந்த செய்தியைக் கேட்டவுடன் நான் அசோக் தியேட்டரில் போய் உட்கார்ந்துகொண்டேன் நான் எப்போதுமே, மகிழ்ச்சியை தனிமையில் இருந்து கொண்டுதான் அனுபவிப்பது வழக்கம்! தனிமையில் இருந்து மகிழ்ச்சியை அனுபவித்தால் தான் அந்த மகிழ்ச்சியின் சுவையை அறிய முடியும்!

நம்முடைய தோழர்கள் தொந்திரவு செய்வார்கள்-தனிமையிலிருந்து மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்று அசோக் தியேட்டருக்கு சென்றேன்! அங்கேயும் நம்முடைய தோழர்கள் விடவில்லை, பாதியிலேயே எழுந்து வந்து விட்டேன்! சென்ற தடவை கூட காஞ்சிபுரத்திற்குச் சென்று இரண்டு நாள் தனிமையில் இருந்தேன்! இங்கு வருவதற்கு முன்பு கூட ஒரு நாட்டியக் கச்சேரியைப் பார்த்துவிட்டு, அருமையான விருந்தும் சாப்பிட்டு விட்டு வந்தேன்! ஆனால் ஒவ்வொரு தடவையும் இப்படித்தானா வெற்றி பெற வேண்டும்! தேர்தல்முறை மாறவேமாறாதா என்பதைப் பற்றியும் நான் சதா சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன்!

முதலமைச்சர் கனம் காமராஜர் சிதம்பரம் தொகுதியில் ஸ்ரீமுஷ்ணம் என்ற ஊரில் பேசும் போது "படித்தவர்கள் காங்கிரஸ்கட்சிக்கு ஓட்டுப்போட பயப்படுகிறார்கள் என்றும், பாமரர்கள் தான் ஓட்டுப் போடுகிறார்கள்" என்றும்கூறினாராம்! பாமரர்கள் என்றால் என்ன அர்த்தம்! பச்சைத்தமிழில் கூறவேண்டுமானால் என்னகூறவேண்டும்! தமிழ் மொழியால் சொல்ல வேண்டுமானால் எப்படிச் சொல்லவேண்டும்! உலகத்தில் எந்தத் தலைவனும் "என்னை படித்தவர்கள் ஆதரிக்கவில்லை" என்று கூறியது கிடையாதே! படிக்காத தலைவர்கள்கூட அப்படிச்சொன்னது கிடையாதே!

காற்று எந்த பக்கம் அடிக்கிறதுஎன்பதை தெரிந்துகொள்ள கூடவா முடியவில்லை! கொடியில் இருக்கிறதுணிஎந்தப்பக்கம் ஆடுகிறதோ அந்த பக்கம்காற்று அடிக்கிறது என்று பொருள்!

நமது மாநிலத்தின் ஒப்பற்ற தலைவர் கூறுகிறார் "படித்தவர்களெல்லாம் அந்தப் பக்கத்தில்" என்று! பாமரர்கள் எப்போதுமே பாமரர்களாக இருக்க மாட்டார்கள், பாமரர்களின் எண்ணிக்கை அப்படியேவும் இருக்காது! படித்துக்கொண்டே வருவார்கள், படித்தவர்களின் தொகை வளர்ந்து, விஷயம் தெரிந்து கொண்டபின்பு என்ன ஆகும்" என்பதை சொல்லாமல் சொல்லி இருக்கிறார் நமது முதலமைச்சர்! அவர்பயப்படுவது இயற்கைதான்!

சிதம்பரம் தொகுதியில், அண்ணாமலை பல்கலைக்கழகம் இருக்கும் அண்ணாமலை நகரில் படித்தவர்கள் அதிகம் இருக்கிறார்கள். அரசியலைப் பற்றி சொன்னால் புரிந்து கொள்ளுபவர்கள்அங்கே அதிகம்! அந்தப் பகுதியில் காங்கிரஸ்காரரைவிட நமக்கு இரண்டாயிரம் ஓட்டுகள் அதிகம், அதேபோல் ஸ்ரீ முஷ்ணத்தில் நமக்கு ஆயிரத்திற்கு அதிகமான ஓட்டுக்கள் அதிகம்! இதேபோல் காட்டுமன்னார் குடியிலும் நமக்குதான் அதிக ஓட்டுக்கள் கிடைத்திருக்கின்றன!

எங்கே அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால்— "அதோ தெரிகிறதோ அந்த ஊர் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது" என்று கேட்டால் இப்படி போனால் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கிறது! சுற்றிக் கொண்டு போனால் 7 மைல் தொலைவில் இருக்கிறது" என்று சொல்லுவார்கள்! அந்த ஊர்களில்தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள்! "ஜீப்" காரில் செல்ல முடிந்த இடங்களிலெல்லாம் சென்று வெற்றி பெற்றார்கள்! சரி, இந்தத்தடவை பெற்றீர்கள்! அடுத்தத் தடவை? அண்ணாமலைநகர் அளித்த தீர்ப்பு, காட்டுமன்னார்குடி செய்த முடிவு, ஸ்ரீமுஷ்ணம்காட்டியபாதை எல்லா ஊர்களும் பின்பற்ற ஆரம்பித்தால் காங்கிரஸ்காரர்களின் வித்தை எப்படி செல்லுபடியாகும்! இந்தத் தடவை செய்தது போல் அடுத்தத் தடவை நிச்சயமாகச் செய்ய முடியாது,

நம்மைப் பற்றி அறியாத இடங்களில், பட்டி தொட்டியெங்கும் கழகத் தோழர்கள் தூதுவர்களாக இருந்து பணிபுரிய வேண்டும், காமராஜர் நம்மை யெல்லாம் பணத்தால் அடித்து வீழ்த்தி விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார், அதற்கு சவால் விடும் முறையிலே நீங்களெல்லோரும் பணிபுரிய வேண்டும்,

மகா அலக்சாண்டரின் தந்தை பிலிப் என்பவர் ஊர்களைப் பிடிக்க பட்டாளத்தைத் திரட்டச் சொன்னாலும்! ஊர்களைப் பிடிக்க பட்டாளத்தை ஏன் திரட்ட வேண்டும், ஆயிரம் கழுதைகளைப் பிடித்து வந்து, அந்த கழுதைகளின் மேல்பணமூட்டையைப் போட்டு அனுப்புங்கள், ஊர் தானாக பிடிபடும் என்று அங்குள்ள அதிகாரி கூறினாராம்

காமராஜர்போய்பணம் கேட்டால் அவருக்கு தட்டாமல் கொடுக்க ஆட்கள் உண்டு. நாம் கேட்டால் கொடுப்பதற்கு ஆட்கள் ஏது?

அடுத்த தேர்தலுக்கு நானும், கருணாநிதியும், அன்பழகனும் பணம் கேட்டால் நீங்கள் கொடுக்க வேண்டும். அதற்கு இப்போதிருந்தே உங்களை தயார் செய்து கொள்ள வேண்டும். இன்றைய தினத்திலிருந்து ஆளுக்கொரு உண்டியைவைத்து உங்கள் கையில் கிடைக்கிற காசை அதிலே போட்டு வையுங்கள். தினம், தினம் ஒரு பைசா, 5 புதிய காசு—உங்கள் கையில் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவு போட்டு வைத்தால் ஒரு பதினைந்து இலட்சத்தை, ஒரு பத்து இலட்சத்தை நம்மால் சேர்க்க முடியும். இந்தப் பணியை இப்போதிருந்தே துவங்கினால் நிச்சயமாக நாம் காங்கிரசை முறியடித்து காட்ட முடியும்.

சென்ற பொதுத் தேர்தலில் நமக்கு வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் பேர்! இந்த 17 இலட்சத்திலே ஓரளவு பணம் கொடுக்க வசதியுள்ளவர்கள் ஒரு பத்து இலட்சம் பேராவது இருப்பார்கள் என்று கணக்கிட்டால்—அவர்கள், ஒரு காசு, ஐந்து புதிய காசு என்று சேர்த்து கொடுத்தாலும் ஒரு ஐந்து இலட்சமா[illegible] சேர்க்க முடியும்!

ஒரு ஐந்து இலட்சத்[illegible] னிடம் அடுத்த தேர்[illegible] கொடுத்தால் — உங்கள் [illegible] மீதுஆணையிட்டுக் கூறு[illegible] — உங்கள்ஆற்றல்மீதுஆணையிட்டுச் சொல்லுகிறேன் காமராஜரை நிச்சயமாக ஒருகைப்பார்க்கமுடியும்!

அடுத்துவர இருக்கிற தேர்தலுக்கு நாம் பணம் சேர்த்தாக வேண்டும்! ஏதாவது தொழில் செய்பவர்கள் கொஞ்சம் மிச்சப்படுத்தி தர வேண்டுகிறேன்! சம்பளம்பெறுபவர்கள் சம்பளத் தொகையில் கொஞ்சம் மீது செய்து தரலாம்! நேரத்தையும் அறிவையும், ஆற்றலையும் சிலர் அதிகமாகத் தரலாம்! உழைக்க கூடியவர்கள், தங்கள் உழைப்பைக் காணிக்கையாகத்தரலாம்! இதனால் யாருக்கு லாபம்?

இன்றையதினம் அப்துல்காதர் மேயராக இருக்கிறார் என்றால், இங்கே கூடி இருப்பவர்கள் அனைவரும்தாங்களே மேயராகி விட்டது போலல்லவா கருதுகிறீர்கள்!

(12-ம் பக்கம் பார்க்க)


19-12-59 முதல் வெளிவருகிறது

சூடான அரசியல் கருத்துக்கள்!

சுவைமிக்க கற்பனை ஓவியங்கள்!

அன்றாட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு!

தி. மு. க. அணி வகுப்பில் முரசு கொட்டும் பொன்னேடு!

ஆசிரியர்: T. K. சீனிவாசன்

தி. மு. க. வார ஏடு

தாய்நாடு

விலை 16 காசு — ஆண்டு சந்தா ரூ. 8 — அரை ஆண்டு சந்தா ரூ. 4

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்.

'தாய்நாடு' அலுவலகம், சென்னை-14.

# பண பலத்தால் கழகத்தை கவிழ்க்க முடியுமென்று காங்கிரஸ் நினைத்தால்

## கழகம் கவிழாது காங்கிரஸ் தான் கவிழும்!

### நாடாள்வோருக்கு என். வி. நடராசன் எச்சரிக்கை



சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேயர் திரு. அப்துல் காதர் அவர்களுக்கும், துணை மேயர் திரு. தேவராசன் அவர்களுக்கும் நடைபெற்ற பாராட்டு விழாவில் துணை பொதுச் செயலாளர் திரு. என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரை.

மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தாய்மார்களே! பெரியோர்களே! தோழர்களே!

நமது மேயர் அப்துல்காதர் அவர்களையும், துணை மேயர் தேவராசன் அவர்களையும் நாமெல்லாம் பாராட்டும் இந்தக் கூட்டத்தில் மனமார மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கிறோம்.

இந்த தேர்தலில் அரசியல் கருத்துக்கு மாறுபட்டவர்கள் செய்த சூழ்ச்சிகளை நாடு அறியும். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, எதிர்க் கட்சிகள் உள்ள அத்தனை பேரும் இந்த வெற்றியை அவர்கள் வெற்றியாகவே கருதுகிறார்கள். காங்கிரசை குழி தோண்டி புதைக்க இந்த வெற்றி உதவியிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

காங்கிரஸ் இழந்ததை மீண்டும் பெறுவதற்கு செய்த சதிகளையும், வெற்றி பெறுவோம் என்று குதித்து தலைவிரித்தாடியதையும் நீங்கள் அறிவீர்கள்.

முதல் தேர்தலில் மேயர் பதவிக்கு ஒரு சுயேட்சையை நிற்க [illegible]து, நமது பலத்தை ஆழம் [illegible]து தோல்வி கண்டார்கள். [illegible]வி கண்டோமே என்ற [illegible] உணர்ச்சி இருக்குமானால் [illegible]யும் மேயர் தேர்தலில் [illegible]மல் இருக்க வேண்டும். இ[illegible] தேர்தலில் அவர்களுக்கு [illegible] புத்தி வந்திருக்கும் [illegible] நினைக்கிறேன்:

[illegible] விட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர்களிடையே மித்திர பேதத்தை வளர்த்துவிட்டால்—தொல்லைகளை கொடுத்தால்—கழகத்தினரின் முயற்சியை தடுத்து நிறுத்திவிட முடியும் என்று நினைத்து சூழ்ச்சிகள் பல புரிந்தார்கள். 'நம்மிடத்திலே உள்ள பண பலத்தால் மேயர் பதவியை பெற்று விடலாம்' என்று காங்கிரஸ்காரர்க்ள் ஏதேதோ பேசினார்கள்.

பண பலத்தால் கவிழ்க்க முடியுமென்று காங்கிரஸ் நினைத்தால் காங்கிரஸ் கவிழுமே தவிர கழகம் கவிழாது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் ஆதரவாலே மேயர் பதவியை பெற்றிருக்கும் அருமைத் தோழர் அப்துல் காத அவர்களும், துணை மேயர் தேவராசன் அவர்களும் உங்கள் எண்ணங்களை நிறைவேற்றுவார்கள். அவர்களுடைய திட்டங்களுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும்.

அப்துல்காதர் இரண்டு தினங்களுக்குமுன் வெளியிட்ட அறிக்கையை பார்த்திருப்பீர்கள். அறிக்கையின் கருத்துக்களை உணர்ந்திருப்பீர்கள். அவைகளுக்கு உங்களுடைய பேராதரவும், மாற்றுக் கட்சிக்காரர்களின் ஒத்துழைப்பும் தேவை. இதை மற்ற கட்சிகள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

காங்கிரசின் எண்ணிக்கை முப்பத்தி ஏழு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நாற்பத்தைந்து பேர். முஸ்லீம் லீக் சேர்ந்து நம் ஆதரவு பெற்ற ஒருவர், அவரோடு சேர்த்து நாற்பத்தி ஆறு. கம்யூனிஸ்ட் நான்கு பேர் சேர்ந்து ஐம்பது பேர். நமக்கு ஆதரவு கொடுத்த இரண்டு சுயேட்சைகள் உட்பட நமது எண்ணிக்கை ஐம்பத்தி இரண்டு நகர முன்னணியைச் சேர்ந்த பதினாறு பேருடன் சேர்த்து காங்கிரசின் எண்ணிக்கை நாற்பத்தி எட்டு. இந்தக் கணக்கை புரிந்து கொள்ளாமல் நப்பாசைக் கொண்டு—ஆறு மாதத்தில் இவர்கள் என்ன செய்துவிட்டார்கள் என்று கூறி கோயில் பெருச்சாளிகளைப் போல பதவி ஆசை விடாமல், முன்னே செய்த ஊழல்களை இவர்கள் கண்டுபிடித்து மக்கள் முன் வைப்பார்களே என்று அஞ்சி ஊழல்களை மறைக்க என்னென்ன காரியங்களையோ பார்த்தார்கள்.

இங்கே, காங்கிரசுக்கு கொடுத்த அடி, டெல்லிக்கு கேட்டிருக்கிறது. இந்திய—சீன எல்லைப் பிரச்னை செய்தியையும் பின் தங்க வைக்கும் நிலையிலே நம்முடைய மேயர் வெற்றி நேருவுக்கு எட்டியிருக்கிறது. டெல்லியிலே உள்ள மூலவர்களுக்கு கேட்டிருக்கிறது.

அங்கே உள்ளவர்கள் காமராசரைக் கேட்டபோது காமராசர் கூறினாராம், 'மேயர் என் ஜோபியிலே' என்று.

இந்த தேர்தலிலேயே ஒரு மாடு காணாமல் போய் விட்டது. இதற்கு காங்கிரஸ்காரர்கள் அலைந்தார்கள், மானாபிமானம்—ரோஷம் இவர்களுக்கு இருக்குமேயானால்மிச்சமுள்ள முப்பத்தி ஆறு மாடுகளையும் கார்ப்பரேஷனை விட்டு ஓட்டிக்கொண்டு போக வேண்டும்.

பண பலத்தால் எங்கள் ஒற்றுமையை, கட்டுப்பாட்டை பாழ்படுத்த நினைத்தால் எந்த நாளும் தோல்வியைத்தான் அடைவீர்கள்.

அண்ணா அவர்கள் அரசியல் கட்சித் தலைவர் மட்டுமல்ல—அவர் தீர்க்கதரிசி என்பதை இந்த தேர்தலில் அண்ணா அவர் கையாண்ட முறைகளிலிருந்து மாற்றுக்கட்சிக்காரர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

கார்ப்பரேஷனில் முன்பு இருந்த நிர்வாகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்றபிறகு இப்போதுள்ள நிர்வாகத்தையும் பார்த்தால் நன்கு தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சென்ற பிறகு கார்ப்பரேஷன் வருவாயில் முப்பது லட்சத்தை அதிகமாக்கி இருக்கிறது.

நம்முடைய பணிகளுக்கு மற்ற கட்சிகளும் துணையாக நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வெற்றி சென்னை மாநிலத்திற்கே கிடைத்த வெற்றியாகும். வெற்றிக்கு ஆதரவு கொடுத்தவர்களுக்கு நன்றியை கூறிக்கொண்டு, மேயர் அப்துல் காதர் அவர்களுக்கும், துணை மேயர் தேவராசன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்து என் உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

# நமது மேயர் அப்துல்காதர் தியாக பரம்பரையிலே வந்தவர் !

## முஸ்லீம் வேறு-நாம் வேறு அல்ல! பரம்பரையாகவே பாசத்தோடு வாழ்ந்தோம்!

## கலைஞர் கருணாநிதி களிப்புரை !

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேயர், துணை மேயர் பாராட்டு விழா நேப்பியர் மைதானத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் கலைஞர் கருணாநிதி அவர்கள் மேயர்—துணை மேயரைப் பாராட்டி பேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே, தோழர்களே, அருமைத் தாய்மார்களே!

சென்னை மேயர் அப்துல் காதர் அவர்களையும், துணை மேயர் தேவராசன் அவர்களையும் இன்றையத் தினம் சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாராட்டி, வரவேற்பு தருகின்ற இக் கூட்டத்தில் நானும் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பினை தந்த சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை அருமை நண்பர் சேலம் க. ராசாராம் அவர்களும், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் சென்னை மேயர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி குறித்தும், வெற்றியை தடை செய்வதற்கு வீர நடை போட்ட காங்கிரஸ்காரர்களின் தோல்வியைப் பற்றியும் கூறினர்கள்.

உள்ளபடியே அப்துல் காதரும், தேவராசனும் பெற்ற வெற்றி முன்னைய வெற்றியை விட பெருமகிழ்ச்சி தருகின்ற வெற்றி-இரட்டிப்பான வெற்றி-காங்கிரசை வீழ்த்திய வெற்றி என்று சொன்னுல் மிகையாகாது!

முன்பு அரசுவும், சிவசங்கரனும் மேயர் தேர்தலில் போட்டியிட்டபோது காங்கிரஸ்காரர்களின் பக்கபலத்தோடு சுயேட்சையை நிற்க வைத்து பலப் பரீட்சை செய்து பார்த்தனர். இரண்டு, மூன்று ஓட்டு வித்தியாசத்திலே சுயேட்சை அபேட்சகர் தோல்வியுற்ருர்.

நாம் ஆதரித்த சுயேட்சை வெற்றி பெற்று விடுவார் என்ற தவருன கணக்குப் போட்டு தோள் தட்டி துடை தட்டி மீசை இருப்பவர்களும், இல்லாதவர்களும் முறுக்கிக் காட்டி இந்தத் தடவை வெற்றி காங்கிரசுக்குத்தான் என்று கூறி, மேயர் வெற்றியினுல் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை பயப்படுத்தி விடலாம் என்ற எண்ணத்தோடு சென்னை மக்கள் காணுத வகையிலே மாபெரும் ஊர்வலம் ஏற்பாடு செய்ய, நல்ல பாண்டு வாத்தியங்களுக்கு ஏற்பாடு செய்து, அருமையான ரதங்களை தயாராக வைத்துக் கொண்டு, இரவு விருந்து அருமையான பலகாரங்களையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

அன்று மாலை அரசு வெற்றி பெற்ருர். சுயேட்சையாக நின்றவர் இரண்டு ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியுற்ருர். காங்கிரஸ் தோல்வி அடைந்தது.

இந்த மேயர் தேர்தலிலும் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று அடிக்கடி எடுத்துக் கூறி வந்தார்கள். அவர்களுக்கு பெரிய பெரிய பணக்காரர்களும், ஆலை முதலாளிகளும் உதவி புரிந்தனர். அத்தகையோரின் உதவி நமக்கு இல்லை.

சாதாரணமான — சாமான்யமான கட்சியிலே இருந்து மேயரும், துணை மேயரும் வெற்றி பெற்றிருக்கின்றனர். அதற்கு காரணம் சென்னை மக்களின் பேராதரவும், ஒத்துழைப்பும் தான்!

எட்டு ஆண்டுகட்கு முன்பு இஸ்லாமிய இனத்தைச் சேர்ந்தவர் மேயராக இருந்தார். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் அப்துல்காதரை மேயராக அமரச் செய்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முஸ்லிம் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டது என்பதை பழைய சரித்திரத்தை புரட்டிப் பார்த்தால் தெரியும்.

அவர்கள் வேறு— முஸ்லிம்கள் வேறு—திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் அவர்களும் இணைந்து வேலை செய்ய முடியாது என்று கூறிய மாற்றுக் கட்சிக்காரர்கள் உணர்ந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

இன்று அப்துல் காதர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிருர். திராவிட முன்னேற்றக் கழகமாக இல்லாமல்—திராவிட கழகமாக இல்லாமல்—திராவிடர் இயக்கமாக, தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக, ஜஸ்டிஸ் கட்சி இருந்தபோது இஸ்லாம் மதத்தைச் சார்ந்த பல நண்பர்கள் ஈடுபாடு கொண்டிருந்தார்கள்.

இந்த நாட்டை நாம்தான் ஆள வேண்டும் என்ற கருத்தை தாவூத் ஷா என்பவர் பத்திரிகையின்மூலம் வெளிப்படுத்தினுர். கான்பகதூர் கலிபுல்லா போன்றவர்கள் நமது இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்கள்.

நமக்கும் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் திராவிடர் இயக்கததாலும் இருவருக்கிடையே உள்ள உறவின் வேகம் வளர்ந்து வந்திருக்கிறது.

ஜனுப் ஜின்னு பாக்கிஸ்தான் வேண்டுமென்று கேட்டபோது முஸ்லீம் இனத்தவர்கள் தனியாக பிரிந்து தனித் தரணியை ஆள வேண்டுமென்று, அக்பரின் ஆட்சியை எடுத்துக் காட்டி, ஷாஜஹானின் கலைத் திறமையை சொல்லி, மொகலாய சாம்ராஜ்யங்களின் சிறப்புகளை எடுத்துச் சொல்லி, முஸ்லீம் மறுமலர்ச்சி இனமாக, தனி நாட்டை பெற்றுத்தான் தீர வேண்டும் என்று உரிமைக் குரலை யெழுப்பி, அதற்காக நல்ல பல விளக்கங்கள் தந்து ஜனுப் ஜின்னுவின் கொள்கைக்கு தென்னுட்டில் ஆதரவு கொடுத்தவர்கள் நாம்!

அந்தக் காலத்திலிருந்து வளர்ந்து வரும் நம் ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டு அப்துல் காதர் மேயராக இன்று கொலு வீற்றிருக்கும் காட்சி! மேயர் மட்டுமல்ல; இவரைப் போன்ற தியாக பரம்பரை நம்மிடத்திலே உண்டு!

நெல்லிக்குப்பம் மஜீத், முஸ்லிம் இனத்தின் இளைஞன். பதினெட்டு வயதை முடித்து பத்தொன்பதாவது வயதை தொட்டு நின்ற பருவம். சென்ற எம். எல். ஏ. தேர்தலில் நமது இயக்கத்தின் வெற்றிக்காக ஓடியாடி காங்கிரசின் தோல்விக்காக உழைத்தவன். நமது வெற்றிக்காக ஓடியாடி வேலை செய்த உத்தம புத்திரனை பழிவாங்க காந்தியின் சீடர்கள், அகிம்சா மூர்த்தியின் சீடகோடிகள் நினைத்து—

ஆலையிலே இருந்து வீடு திரும்பும் நேரத்தில் — ஊதியமாகக் கிடைத்த வெள்ளிப் பணத்தை கையிலே வைத்துக் கொண்டு அப்பாவுக்கு ஒரு வேட்டி வாங்கலாம், பெற்று வளர்த்த தாயாருக்கு ஒரு புடவை வாங்கலாம், சிரித்து மகிழ்ந்தாடும் தங்கைக்கு ஒரு சிற்ருடை வாங்கலாம் என்று நினைத்துக்கொண்டு வந்தபோது 'நில்' என்றது ஒரு கூட்டம். 'கொல்' என்றது மற்ருெருக் கூட்டம். சொன்னது யார்? ஆகஸ்ட் தியாகிகள் என்று சொல்லிக் கொள்ளும் அகிம்சா மூர்த்திகள்.

எப்படிக் கொன்ருர்கள், அந்த இளைஞனை. 'நீதானே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்காக ஓடியாடி வேலை செய்தாய்' என்று கூறிக்கொண்டு குத்து வாளால் வயிற்றிலே குத்தினுர்கள். குடல் சரிந்தது— இரத்த வெள்ளத்திலே வீழ்ந்தான். சரிந்துவிட்ட குடலை மாலையாக போட்டுக் கொண்டு 'போலோ மகாத்மா காந்திக்கு ஜே' என்று கூவினுர்கள். அந்த தியாக உருவம் செத்துவிட்டது.

அவனுடைய ஏழைக் குடும்பம்—அவனை ஈன்ற பெற்ருேர்கள் அனாதைகளாக ஆகக் கூடாது என்பதற்காக, அறிஞர் அண்ணுவும், நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நிதி கொடுக்க பௌடர் பூசி நாடகம் நடித்து ரூபாய் மூவாயிரத்தை திரட்டினுேம். அந்தத் தொகையிலே கரும்புத் தோட்டம் ஒன்றை வாங்கி மஜீத்தின் தாய் தந்தையின் பேருக்கு எழுதிக் கொடுத்திருக்கிருேம். இப்படி முஸ்லீம் குடும்பத்தோடு நீங்காத தொடர்புகொண்டு பணியாற்றி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

கடந்த ஜனவரி 6-ந் தேதி அன்று கொட்டு முழக்கத்தோடு தென்னகத்தில் — தென்னுட்டுத் தலைவர்களை 'நான்சென்ஸ்' என்று இழித்தும் பழித்தும் பேசிய பண்டித நேரு ஆலவட்டம் சுழல, ஆட்பெரும் படையோடு பவனி வருகிற நேரத்தில் கறுப் கொடி காட்டிய மொய்தீன் பிச்சை, ஜிந்தப்பா என்ற வீரர்கள் போலீஸ் குண்டாந்தடியால் அடிபட்டு வீழ்ந்தார்கள்.

விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை. குதிரையின் குளம்புகள் நெஞ்சைப் பிளந்தது. உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த நேரத்திலும் விடவில்லை. சிறையிலிருந்து வெளிவந்த நானும் அன்பழகனும், அந்த உத்தமர்களின் சவ ஊர்வலத்தில்தான் கலந்து கொள்ள முடிந்தது. அத்தோடு போய் விட்டதா? மறந்தா போனுேம். இல்லையே!

சமீபத்தில் நடைபெற்ற சென்னை மாநாட்டில் தீர்மானித்தபடி இரண்டு குடும்பங்களுக்கு ஐநூறு ரூபாய் வீதம் நிதி தர இருக்கிருேம்.

தியாக பரம்பரையிலே ஒருவராக இருக்கும் நமது அப்துல் காதர் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக ஏதேதோ செய்தார்கள். யானை தன் தலையிலே மண்ணை போட்டுக் கொண்டது போல கடைசியில் அவர்களே தோற்ருர்கள்.

ஒருமுறை தேர்தலில் மோதி மண்டை உடைபட்டது. இரண்டாவது முறையும் மோதி மூக்கறுபட்டிருக்கிறது காங்கிரஸ் என்று என். வி. நடராசன் அவர்கள் கூறினுர்கள்,

ஒரு காங்கிரஸ்காரர் வரவில்லை என்றும் கூறினுர்.

ஏன் ஓடினுர்? என்ன காரணம். சொல்லாமல் ஓடிய அவர், "நாமோ முப்பத்தி ஏழு பேர், அவர்களோ நாற்பத்தைந்து பேர். ஜனநாயகப்படி நாற்பத்தைந்து பேர்தான் ஆள வேண்டும்" என்று எண்ணித்தான் சென்ருர் என்று நினைக்கிறேன்.

ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கும் அந்த ஒரு மனிதர் முப்பத்தியேழு பேரிலே நல்லவர். அவர் பெயரே தெய்வசிகாமணி. இந்த அக்ரமத்

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285


# சென்னை நகரசபைக்குபுதிய வருமானம்!

# ரூ 1,50,00000

## மாநில சர்க்கார் இதை அனுமதிக்குமா? மக்களுக்கு நல்வாழ்வு தருமா ?

மாண்புமிக்க மேயர் அவர்களே! தலைவர் அவர்களே! தாய்மார்களே!

மேயர் தேர்தல் போட்டியில் வெற்றி வாகை சூடிய நம் மேயர் அப்துல்காதரைப்பாராட்டும் இந்த விழாவில் என்னையும் கலந்து பேச சொன்னதற்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



மேயர் அப்துல் காதரை நான் பாராட்டிப் பேசுவது அவ்வளவு சரியல்ல! நகர சபையிலுள்ள 45 திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களில் ஒருவர்தான் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! அவரை நாங்கள் பாராட்டிப்பேசுவது எங்களையே பாராட்டிக் கொள்வதற்கு ஒப்பாகும்! எங்கள் நகர சபைக் கட்சித் தலைவர் ஜீவரத்தினம் கூறியது போல் இந்த ஆறு மாதக் காலத்தில் நாங்கள் என்ன பணியாற்றி வந்திருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லுவதே சரியாகும்!

இந்த ஆறு மாதக் காலத்தில் நாங்கள் செய்துள்ள பணிகளை நகர மக்கள் நன்கறிந்துள்ளார்கள்! பதினைந்து ஆண்டுகளாக சென்னை நகர பரிபாலனத்தை செய்து வந்திருக்கும் காங்கிரஸ் கட்சி செய்யாததை இந்த குறுகிய காலத்தில் நாங்கள் செய்து வந்திருக்கிறோம் என்பதையும் பொதுமக்கள் உணர்வார்கள்!

சென்னை நகர மன்றம் நிறைவேற்றித் தருகிற திட்டங்களையெல்லாம், சென்னை மாநில சர்க்கார் அனுமதியளித்த பின்புதான் அவைகளை அமுல் செய்ய முடியும்! நகர சபை நிறைவேற்றுகிற திட்டங்களை நகர சபையே அமுலுக்குக் கொண்டு வர முடியாது! அதற்கு உரிமையை அளிக்கவில்லை!

### நிதிக்குழுத் தலைவர் வி. முனுசாமி காமராஜருக்கு விடும் சவால் !

நாங்கள் இந்த ஆறு மாதக் காலத்தில் பல நன்மை பயக்கும் திட்டங்களை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம்! இந்தத் திட்டங்கள் எல்லாம் சர்க்கார் அலுவலகத்திற்குச் சென்று அங்கு தூங்கிக் கொண்டிருக்கிறது! நேர்மையும். ஜனநாயக எண்ணமும் கொண்டுள்ள சர்க்காராக இருந்திருந்தால் — நகர சபையில் தி. மு. க. செய்யும் நல்ல பணிகளுக்கு ஆதரவு தர முன்வந்திருக்கும்!

சூளைமேடு, மேற்கு மாம்பலம், கோடம்பாக்கம் அரும்பாக்கம்பல இடங்களில் நாங்கள் கொண்டு வந்திருந்த வடிகால் திட்டத்தை அமுல் செய்வதற்கு சென்னை சர்க்காரை அனுமதி கேட்டிருந்தோம்! நான்கு மாதங்களுக்கு பின்புதான் "பரிசீலிக்கப்படுகிறது" என்ற பதிலைத் தந்திருக்கிறார்கள்! பரிசீலிக்கப்படுகிறது என்பதற்கே நான்கு மாதங்கள் ஆகின்றன என்றால் எப்போதுதான் அனுமதிக் கிடைக்கப் போகிறதோ!

'இந்த வடிகால் திட்டத்திற்கு 54 இலட்சம் செலவாகும்' என்பதையும் திட்டத்தின் வாயிலாக அறிவித்திருந்தோம்! இந்த வடிகால் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்தப் பகுதி மக்களுக்கு எத்தனையோ நன்மைகள் பயக்கும்! அவர்களுக்கு குழாய் வசதி கிடைத்திருக்கும்!

தி. மு. க. செய்யும் நல்ல பணிகளுக்கெல்லாம் சதி வேலை புரிந்து அதை நிறைவேற்ற வொட்டாமல் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்றுதான் கருதுகிறேன்! உண்மை ஜனநாயக வாதிகளாக இருந்திருந்தால்— மக்கள் தேவைகளை அனுசரித்து திட்டங்களை அமுல் செய்ய அனுமதியளித்திருக்க வேண்டும்!

இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும்! சென்னை நகர மக்கள் தான் தங்கள் நல்வாழ்வுக்காக இவைகளை நிறைவேற்றித் தரும்படி தட்டிக் கேட்க வேண்டும்! நீங்கள் தட்டிக் கேட்டால் சர்க்கார் நிச்சயமாக பணிந்தே வரும்!

நாங்கள் பதவி ஏற்ற பின்பு— எங்களையே மனதில் வைத்துக் கொண்டு—முதலமைச்சர் காமராஜர் போகிற இடங்களிலெல்லாம் நகர சபை அளிக்கும் வரவேற்பிற்கு பதில் சொல்லும் 'வாயிலாக' நகர சபைகள் புதிய வரிகள் விதிக்க வேண்டும்" என்றே கூறி வந்திருக்கிறார்கள்!

சமீபத்தில்கூட வேலூர் நகர சபை 'புதிய வரி விதிக்கவேண்டும்" என்பதை வலியுறுத்தி கூறி இருக்கிறார்!

உண்மையிலேயே நேர்மையும் நாணயமும் உள்ளவர்களாக இருப்பவர்களானால்- மக்களுக்கு பாதிக்காத வரித்திட்டங்களைத் தருகிறோம்—அதற்கு அனுமதி தருவார்களா?

ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்களுக்கு "துறைமுக வரி" என்ற பெயரால் டன் ஒன்றுக்கு, இரண்டு, மூன்று ரூபாய் வீதம் வசூலிக்கப்படுகிறது! ஏறத்தாழ வருடமொன்றுக்கு 50 இலட்சம் டன்களுக்கு மேல் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன!

இந்த ஏற்றுமதி பொருள்கள் நகர சபை பரிபாலனத்திற்கு உட்பட்ட சாலைகளின் வாயிலாகத் தான் போய் வருகின்றன! எனவே துறை முகமரியைப் போல் — சாலைகளில் சென்று, வருவதால் நகர சபையும் டன் ஒன்றுக்கு இரண்டு, அல்லது மூன்று ரூபாய் வீதம் வரி விதிக்கலாம்! இந்த வரி நேரடியாக ஏழைகளைப் பாதிக்கவும் செய்யாது! பம்பாய், கல்கத்தா போன்ற துறைமுக வசதி படைத்த பெரிய நகரங்களில் இந்த வரி நகர சபையால் வசூலிக்கப்பட்டு வருகிறது! இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 1,50,00000 வருமானம் கிடைக்கும்! இதைக்கொண்டு பல்வேறு வசதிகளை நகர மக்களுக்கு செய்து தர முடியும்! இதை சென்னை சர்க்கார் அனுமதிக்குமா?

இது போன்ற நல்ல திட்டங்களை மக்கள் ஆதரித்து எங்கள் பணிக்கு மேலும் ஊக்கம் தந்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மேயரையும், துணை மேயரையும் மீண்டும் பாராட்டி முடித்துக் கொள்ளுகிறேன்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்துல்காதர் மேயராகி விட்டாரென்றவுடன் ஒவ்வொருவரும் நிமிர்ந்து நடக்கறீர்கள், சிகரெட் கொளுத்தும் போது கூட ஒரு கம்பீரம், முகத்திலே ஒரு தனி களை! பேச்சிலே ஒரு தனி சிரிப்பு! பேசாதவர்களோடுஎல்லாம் வலிந்து வலிந்து பேசுகிறீர்கள்! "யார் கந்தசாமியா? வா வா! எங்கே இத்தனை நாளும் காணோம் என்று விசாரித்து நம்முடைய அப்துல்காதர்மேயராகி விட்டார் தெரியுமா" என்றுகேட்கிறீர்கள்! அப்துல்காதர் மேயரென்றால் 'உங்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியே ஒரு தனி மகிழ்ச்சியாகஇருக்கிறது! இதைக் கண்டு உண்மையிலேயே நான் பெருமையும், பூரிப்பும் அடைகிறேன்! வெற்றிக் களிப்பிலே இருக்கின்ற நீங்கள் மேலும், உற்சாகத்தோடு பணி புரிந்து நம் கழகத்தை வலிலோடும் பொலிவோடும் வளர்ந்து மேலும் மேலும் வெற்றிப் பாதையில் நடக்க வேண்டும்என்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுகிறேன்!

11-ம் பக்கத் தொடர்ச்சி

திற்கு காங்கிரஸ்காரனே காங்கிரசுக்கு போட்ட மகத்தான சூடு!

மேயர் தேர்தல் நடைபெறுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன் காங்கிரஸ் கட்சியின் தலைவர்—அவர் டெலிபோனில் தெய்வசிகாமணி வீட்டிற்கு போன் செய்து, எங்கே தெய்வசிகாமணி, போய் விட்டால் அவமானம்...பத்திரிகையிலே இந்த செய்தி வந்தால் தூக்கு போட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று பதறினர், அவர்களுக்கு உள்ள அற்ப ஆசை—பணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தை கவிழ்க்க முடியுமென்று நினைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கு பதில் சொல்லியிருக்கிறது.

முன்பு நண்பர் அரசும், சிவசங்கரனும் நகராட்சி மன்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது நண்பர்கள் முனுசாமியும், ஜீவரத்தினமும் உடனிருந்து அவர்களுக்கு துணையாக இருந்து சென்னை மககளுக்கு கொண்டாற்றியதுபோல் இனியும் அப்துல்காதருக்கு துணையாக இருந்து தொடர்ந்து பணியாற்றுவார்கள் என்று உறுதி கூறி, மேயர் அப்துல் காதரையும் துணை மேயர் தேவராசனையும் மனமார வாழ்த்தியும், பாராட்டியும் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை